பக்கங்கள்: பத்து

உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 16 செவ்வாய்க்கிழமை (30.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 216

வன்னியில் மீளக்குடியமர்வின் பின்னரும் மக்களுடன் படையினர் தங்கியிருப்பர்

மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்காது தடுக்க

கொழும்பு, ஜூன் 30

வன்னியில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீண்டும் தமது பகுதிகளில் குடியேற்றப்பட்ட பின்னரும் அவர்களுடன் படையினர் தங்கியிருப்பர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் இரண்டு இராணுவத் தலைமையகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. படையினரின் எண்ணிக்கையை 50 வீதத்தினால் அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் பி.பி.ஸியிடம் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

கனகரட்னம் எம்.பியை பிரதமந்திரவான் பார்வையிட்டார்

கொழும்பு, ஜூன் 30

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தை நேற்று கொழும்பு, (10 ஆம் பக்கம் பார்க்க)

13ஆம் திருத்தத்தை அமுல்படுத்தினால் அரசிலிருந்து வெல உறுமய வெளியேறும்

தமிழருக்கு உணவு, உடை தவிர வேறெதுவும் தேவையில்லை என்கிறது

கொழும்பு, ஜூன் 30

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த முயன்றால், அரசிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படும் என ஜாதிக ஹெல உறுமய எச்சரித்துள்ளது.

தமிழ் மக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், சுயகௌரவத்தைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை என நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுவதையும் கடுமையாக எதிர்த்துள்ள அவர் இதுகுறித்து மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

- அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

அரசு இதனை செய்தால் அரசிலிருந்து நாங்கள் வெளியேறவேண்டிவரும்.

13 ஆவது திருத்தச் சட்டம் நாட்டிற்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

அது முழுமையாக அமுல்படுத்தப் படாமல் உள்ளதால்தான் நாடு இதுவரை மோசமான பாதிப்புகளிலிருந்து தப்பியுள்ளது. இந்த திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாணங்களுக்கு காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதையும் எதிர்க்கிறோம். (10 ஆம் பக்கம் பார்க்க)

யசூஷி அகாஷி கொழும்பு விஜயம்

கொழும்பு, ஜூன் 30

கொழும்பில் இன்று ஆரம்பமாகவுள்ள பொருளாதார உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கான ஜப்பான் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவர்-ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு, ஜூன் 30

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவர் இக்சியோயு ஸாஓ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுக் காலை சந்தித்துக் கலந்துரையாடினார். அலரி மாளிகையில் இச்சந்திப்பு இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி (10 ஆம் பக்கம் பார்க்க)

செஞ். குழு உடன்பட்டதையடுத்து

'வணங்கா மண்' பொருள்களை பிறிதொரு கப்பலில் அனுப்பும் பணிகளில் இந்திய செஞ்சிலுவைக் குழு

சென்னை, ஜூன் 30

புலம்பெயர் தமிழர்களின் உதவிப் பொருள்களை ஏற்றி வந்த 'வணங்கா மண்' (கப்டன் அலி) கப்பலில் உள்ள பொருள்களை ஏற்க இலங்கை செஞ்சிலுவைக் குழு உடன்பட்டதை அடுத்து, அதனைப் பெற்று இலங்கைக்கு அனுப்பும் பணிகளில் இந்திய செஞ்சிலுவை குழு ஈடுபட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய வெளியுறவு (10 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா முகாமிலிருந்து வந்த மூன்று பேர் கொழும்பில் கைது!

கொழும்பு, ஜூன் 30

வவுனியாவில் உள்ள முகாம்களில் தங்கியிருந்த பின்னர் வெளிநாடு செல்லும் நோக்கில் கொழும்புக்கு வந்த மூன்று பேர் கொட்டாஞ்சேனைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தங்கும் விடுதி ஒன்றில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இடம்பெயர்ந்தோர் (10 ஆம் பக்கம் பார்க்க)

யுத்த நிறுத்த ஒப்பந்தமே பிரபாகரனைக் கொன்றது

உரிமை கோரி மார்தட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 30

புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தமே புலிகளின் தலைவர் பிரபாகரனின் கொலைக்குக் காரணம் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. வஜிர அபயவர்தனவே இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

புலிகள் கொல்லப்பட்டு (10 ஆம் பக்கம் பார்க்க)

உதயன் ஊழியர்கள், விற்பனை முகவர்கள் மற்றும் அனைவரும் அச்சம் கொள்ளாது தமது பணிகளைத் தொடர வேண்டும்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

தாம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின்பால் நம்பிக்கை கொண்டு, உதயன் ஆசிரியபீடத்தினர், பணியாளர்கள், விநியோகத்தர்கள், விற்பனை முகவர்கள் அனைவரும் அச்சம் கொள்ளாது தங்களது செயற்பாடுகளைத் தொடருமாறு ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கேட்டுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

பத்திரிகைப் பணிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு; அச்சுறுத்தல்களால் குழப்பமுற வேண்டாம் என்கிறார் படைத்தளபதி

பத்திரிகையை வெளியிடுவது, விற்பனை செய்வது ஆகிய செயற்பாடுகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களால் சம்பந்தப்பட்டோர் குழப்பமுற வேண்டியதில்லை.

இவ்வாறு படைகளின் பலாலித் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் மென்டகு சமரசிங்க அறிவித்துள்ளார்.

உதயனுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (10 ஆம் பக்கம் பார்க்க)

உதயனுக்கு விடுக்கப்பட்ட இந்த அச்சுறுத்தல் மக்களிடம் அச்சங்களை உருவாக்கி உள்ளது-கூட்டமைப்பு

குடாநாட்டுப் பத்திரிகைகள் எரிக்கப்பட்ட இரண்டுநாள்களுக்குள் 'உதயன்' பத்திரிகைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதன் பணியாளர்களுக்கும் விநியோகஸ்தர்களுக்கும் விற்பனை முகவர்களுக்கும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது மாநகர சபைத் தேர்தல் தொடர்பாகவும் குடாநாட்டு நிலைமை தொடர்பாகவும் மக்கள் மத்தியில் அச்சங்களை உருவாக்கியுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

பத்திரிகைகளை அச்சுறுத்துவது அடிப்படை மனித உரிமை மீறலாகும்-ஆனந்தசங்கரி

கருத்துக்களை கருத்துக்களால் வெல்ல வேண்டுமே தவிர, கருத்துக்களைக் கருவிகொண்டு அடக்க முற்படக் கூடாது. பத்திரிகைகளைத் தீயிட்டுக் கொளுத்துவதும், அவற்றின் பணியாளர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுவதும் அடிப்படை மனித உரிமையை மீறுவதாகும் - என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனில் உயர்கல்வி பயில்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள (லண்டன்) உள் துறை அலுவலகத்தால் 'A' தரத்தில் பட்டியலிடப்பட்ட தலைசிறந்த, நீண்டகால வரலாற்றையுடைய பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் விரும்பிய கற்கைநெறிகளுக்கு அனுமதி.

குறைந்த கட்டணச்சலுகைகள், விமான நிலைய அழைப்பு ஏற்பாடுகள், தங்குமிடவசதி ஏற்பாடுகள், பகுதிநேர வேலைக்கான ஆலோசனைகள் என்பனவும் வழங்கப்படும்.

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க தினமும் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை நேரில் சந்திப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே சந்தித்தவர்கள் தங்களிடம் கோரப்பட்டுள்ள விவரங்களுடன் தினமும் நேரில் வரலாம்.

உடன் தொடர்புகளுக்கு :-

தொ.பே.0212223818,

எந்த நேரமும் தொடர்புகொள்ள 0774528818

E.Mail : mg 1404_2009@ yahoo.com

148, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (யுனிசெல் முன்பாக) (சி/559246)

வாழ்த்துகின்றோம்

அண்மையில் ஓய்வுபெற்ற

திரு.க.செல்வக்குமரன்

(அதிபர், யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம்)

திரு.க.தணிகாசலம்

(அதிபர், யா/புதுமடம் றோ.க.த.க. பாடசாலை)

ஆகியோரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர்
அதிபர், ஆசிரியர்கள்,
கல்வி சாராத உத்தியோகத்தர்.

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

தோற்றம்: 20.10.1925

மறைவு: 29.05.2009

அமரர் சின்னட்டியார் கந்தையா

கடந்த 29.05.2009 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் சின்னட்டியார் கந்தையா அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (30.06.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

மனைவி, மகள்,
மருமகன், (ந.சிவகுமார்).

மரண அறிவித்தல்

திருமதி புனிதவதி விஜயரட்ணம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி விஜயரட்ணம் நேற்று (29.06.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் தம்பிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற விஜயரட்ணம் (சுகாதார பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற றவிகுலராஜன் (பட்டயக் கணக்காளர்) மற்றும் சௌபாக்கியகௌரி (பிரதி அதிபர், மகாஜனக் கல்லூரி), செந்தில் செல்வம் (கனடா), சோமஸ் கந்தன், திருமகள் (முன்னாள் கணக்கெழுத்தாளர், CARSONS) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மநாதன் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், அருணோதயக் கல்லூரி), ஜெயரட்ணம் (பொறியியலாளர், கனடா), திருமதி இ.ராஜேஸ்வரி (கொம்யூட்டர் ரெக்னிசன், கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற கணேசரட்ணம், முத்துக்குமாரசாமி, அருணாசலம் மற்றும் திருமதி தில கவதி கதிர்காமசேகரம், திருஞானசம்பந்தமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற புஷ்பதேவி, மரகதம், கதிர்காமசேகரம் யோகராணி ஆகியோரின் மைத்துனியும் செந்தூரன் (இன்போமேஷன் ரெக்னோலொயிற்ஸ், கனடா), சுபாஜி, றக்ஷா (யூனிவேசிற்றி, நியூயோர்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (30.06.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தம்மனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ம.பத்மநாதன்

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் அமைச்சருடன் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன்30

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான சந்திப்பு ஒன்று இன்று காலை 8 மணிக்கு அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

ஐந்து வலயங்களிலும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமைபுரியும் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

பயிர்ச்செய்கைக்கு விவசாயிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன்30

விவசாயத் திணைக்களத்தின் கிராமத்திற்கு ஒரு பயிர்த் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி கல்வயல் கமக்காரர் அமைப்பைச் சேர்ந்த 20 விவசாயிகள் 'பாவல்' பயிர்ச் செய்கைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப் பயிர்ச் செய்கைக்கான உரவகைகளும் கிருமி•நாசினிகளும் இன்று காலை 9மணிக்கு விளைவேலி துர்க்கை அம்பாள் ஆலய மண்டபத்தில் வழங்கப்படவுள்ளதாக அமைப்பின் பொருளாளர் அ.பற்குணநாதன் அறிவித்துள்ளார்.

தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான உரவகைகளும் கிருமி நாசினிகளும் 50 சதவீதமானிய விலையில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (203- 207)

பாராட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 30

தேசிய நூலக ஆவணமாக்கல் சபையின் 2009 தேசிய நூலக வார விழாவில் வடக்கு மாகாணத்தில் சிறந்த நூலகம் எனப் பாராட்டப்பட்டு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ ஜானக பண்டார தென்னக்கோன் அவர்களால் விருதளிக்கப்பட்ட சுன்னாகம் பொது நூலகத்தைப் பாராட்டும் வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் பி.ப 2 மணிக்கு இடம்பெறவுள்ள இந் நிகழ்வுக்கு உடுவில் மத்தியஸ்த சபைத் தலைவர் சு.தம்பித்துரை தலைமை தாங்குவார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்துகொள்வார். (203-55)

தவறிவிட்டது

ஆனைப்பந்தி சந்தியில் இருந்து நாவலர் வீதியூடாக கச்சேரி - நல்லூர் முத்தவிநாயகர் கோயிலுக்கு சென்றபோது திறப்பு கோர்வை அடங்கிய சிவப்பு பை ஒன்று நேற்று (29.06.2009) பி.ப. 6 மணிக்கும் 7 மணிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செலான் வங்கி யாழ்.கிளையில் ஒப்படைக்கவும். T.P.No.0777582996. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

காணிதேவை

K.K.S. வீதியில் சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் வீதி ஓரமாக கடை கட்டுவதற்கு காணி தேவை.

தொடர்பு: 071 2827938

விற்பனைக்கு

நல்ல இனபொமேரியன் நாய் குட்டிகள் (ஆண், பெண் விற்பனைக்குண்டு

தொடர்பு:
ஆ.ராஜன் ,22 /4, மூத்த தம்பி வீதி, மானிப்பாய்.

தேவை

விற்பனையாளர்கள் (ஆண்/ பெண்) இருபாலாரும் தேவை.

தொடர்பு: (12 மணி முதல் 2 மணிவரை)
றோயல் கொலேஜ்,118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

THE ROYAL COLLEGE OF JAFFNA

மூன்று மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி No 426, K.K.S வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை. (85977)

தவறிவிட்டது

15,சந்தனமாதா ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய சந்திரகுமாரன் தர்ஷிபா என்பவரின் தேசிய அ.அட்டை (857622820V) நயினாதீவிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் 27.06.2009 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

ம.லவகிரன், 67/32, தர்மலிங்கம் அவனியு, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம். (85978)

தேவை

புடைவை வியாபாரம் பழக விரும்பும் ஆண்கள் உடன் தேவை.

தொடர்பு:
155, 156, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/559274)

மரங்களும், ஆடுகளும் விற்பனைக்கு

பலாகுற்றி, புளியமரம், நல்லின ஆடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
செல்வரெனி, இல.10, கல்லூரி வீதி, கொக்குவில்.

31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் சிவகுரு இராசம்மா

தோற்றம் 14★04★1930 மறைவு 31★05★2009

கடந்த 31.05.2009 ஞாயிற்றுக் கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடுப்பத்தலைவியின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (30.06.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மரண அறிவித்தல்கள்

கனகசிங்கம் சிவபாலசுந்தரம்

(றோயல் அச்சக உரிமையாளர், வவுனியா)

சாவகச்சேரி கற்குழியைப் பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக்கல்லை வதிவிடமாகவும் கொண்ட கனகசிங்கம் சிவபாலசுந்தரம் கடந்த சனிக்கிழமை (27.06.2009) வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசிங்கம் - பராசக்தி தம்பதியினரின் மகனும் சு.செல்லம்மாவின் வளர்ப்பு மகனும் நவரத்தினம் (நகரசபை சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு சகோதரனும் பாக்கியவதியின் அன்பு மைத்துனரும் நிமல் (லண்டன்) சகிலா (அமெரிக்கா) கஜமுகன் (இந்தியா) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.06.2009) திங்கட்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீ சண்முகானந்தா வீதி,
கல்வயல்,சாவகச்சேரி

தகவல்: க.நவரத்தினம் (சகோதரன்).

சிவப்பிரகாசம் பரமேஸ்வரி

கோட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் பரமேஸ்வரி 28.06.2009 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் பிரபல வர்த்தகர் (N.K.S.) சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சறோஜினி தேவி, குபேரன் மற்றும் மகேந்திரன் (லண்டன்), கெங்காதேவி, பாலக்குமார் (சுவிஸ்), நாகேஸ்வரி, செல்வராணி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் தாயும் மகாதேவன் (ஐங்கரன் ஸ்ரோர்ஸ், சங்கானை), வாசுதேவி குணசீதா (லண்டன்), பாலசுப்பிரமணியம் (பிரதம அத்தியட்சகர், தபாற்கந்தோர், கொழும்பு), தர்மகுலசிங்கம் (பொறியியலாளர்- கொழும்பு), குசேலினி (சுவிஸ்), அமிர்தலிங்கம் தயாபரன் (வர்த்தகர்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2009) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்.

திருமதி கதிரவேலு சரஸ்வதி

பளை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது சுன்னாகத்தில் வசித்து வந்தவருமாகிய திருமதி கதிரவேலு சரஸ்வதி நேற்று (29.06.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சீனி - லட்சுமி (சின்னத்தங்கம்) தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் வசாவிளானை பிறப்பிடமாக் கொண்ட முருகன் - கைராசிப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் முருகன் கதிரவேலுவின் (இளைப்பாறிய ஊழியர், C.T.B.) அன்பு மனைவியும் உதயகுமாரன் (ஜேர்மனி), ஜெயக்குமாரன் (கனடா), உதயகலா (பிரான்ஸ்), ஜெயகலா (ஆசிரியர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி), கஜேந்திரகுமார், சுரேந்திரகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் துஷ்யந்தி (கனடா), கிருபானந்தன் (பிரான்ஸ்), ஜெயசிறி ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷாந், உமாலினி, ஷாலினி, அசோக், றெஸ்மி, துஷிக்கா, யதூசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற யோகவனம் மற்றும் முருகையா, காலஞ்சென்றவர்களான சிவராசா, சிவபாதசுந்தரம் மற்றும் சிவலோகநாயகி, சசிகலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அபிராமி மற்றும் கந்தையா, இரத்தினம், தெய்வானைப்பிள்ளை, வடிவேலன் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அந்தோனியார் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.

தகவல்: மு.கதிரவேலு, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊவா மாகாணத்தில் 25 வீதமான மக்கள் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலை

அடையாள அட்டை இல்லாமையே காரணம்

கொழும்பு,ஜூன்30

எதிர்வரும் ஊவா மாகாணசபைத் தேர்தலில் சுமார் 25 வீதமான மக்கள் வாக்களிக்க முடியாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்புத் தெரிவித்துள்ளது. இம்மக்களிடம் தேசிய அடையாள அட்டைகள் இல்லாமையே இதற்குக் காரணம் என அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

அவ்வமைப்பின் ஊடகப் பேச்சாளர் கீர்த்தி தென்னக்கோன் நேற்றுமுன்தினம் 'சுடர் ஒளி'க்கு இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஊவா மாகாணசபைத் தேர்தல் இப்போது சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. எல்லாப் பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. வேட்பாளர்கள் மிகுந்த உற்சாகத்துடன் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மக்கள் மத்தியிலும் தேர்தல் தொடர்பான புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், இத்தேர்தலில் அதிகமானோரால் வாக்களிக்க முடியாமல் போகும். தோட்டப்புற மக்களுள் அதிகமானோருக்கு தேசிய அடையாள அட்டைகள் இல்லாமையே இதற்குக் காரணம். இவ்வாறு சுமார் 25 வீதமான மக்களிடம் அடையாள அட்டைகள் இல்லை. இவற்றைப் பெறுவது தொடர்பான புரிந்துணர்வும் மக்கள் மத்தியில் இல்லை. ஆனால், இவற்றைப் பெறுவது பெரிய விடயமல்ல.

கிராமசேவகரை நாடினால் தற்காலிக அடையாள அட்டைகளை உடனடியாகப் பெறமுடியும். அவற்றைக்கொண்டு வாக்களிக்கமுடியும்.

இதேவேளை, தேர்தல் வன்முறைகள் தொடர்பாக எந்தவித முறைப்பாடும் கிடைக்கப்பெறவில்லை. இதுவரை தேர்தல் நடவடிக்கைகள் சுமுகமாகவே நடைபெறுகின்றன. எதிர்காலத்தில் நிலைமை எவ்வாறிருக்கும் என்று சொல்ல முடியாது.

இது இவ்வாறிருக்க, வடக்குத் தேர்தல் இன்னும் சூடு பிடிக்கவில்லை. ஒரு சுவரொட்டியைக்கூட அங்கு காணமுடியவில்லை. மக்களிடம் தேர்தல் பற்றிய புரிந்துணர்வு இல்லை. தேர்தலை விடவும் வேறு வேலைகள் அந்த மக்களுக்கு இருப்பதாகவே தெரிகின்றது - என்றார். (சி)

வவுனியா முகாம்களில் இருந்து 129 சிறுமிகள் 'அருளகம்' சிறுவர் இல்லத்திடம் ஒப்படைப்பு

கொழும்பு,ஜூன்30

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த பெற்றோரை இழந்த 129 சிறுமிகள் வவுனியா கோயில்குளம் சிவன் கோயில் அறங்காவலர் சபையினால் நடத்தப்படும் 'அருளகம்' சிறுவர் இல்லத்தில் நீதிமன்றத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்படைக்கப்பட்ட இச்சிறுமிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற பல தொண்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. இச்சிறுமிகள் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் சிறுவர் நன்னடத்தைப் பிரிவின் அதிகாரிகளின் கண்காணிப்பில் இருப்பர்.

வன்னியில் இயங்கிய சிறுவர் இல்லங்களில் இருந்து வந்து முகாம்களில் தங்கியுள்ள ஏனைய சிறுவர்களையும் பதிவுசெய்த தன் பின்னர் அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களில் அவர்கள் இணைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-06)

வலிகாமம் வலயப் பாடசாலைகளின் ஆங்கிலதினப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஜூன்30

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் ஆக்கப் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

தரம் 6 - த.கேசிதா (உடுவில் மகளிர் கல்லூரி), ச.தர்சிகா (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி), எஸ்.கில்மியா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி).

தரம் 7 - ம.டார்னியா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), பெஞ்சமின் அரிய சுதன்கூல் (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி), அ.அமிர்தவர்சினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

தரம் 8 - கு.ஹம்சத்வாணி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), சி.நவநீதா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), செ.விருத்திகா (உடுவில் மகளிர் கல்லூரி).

தரம் 9 - தே.காயத்திரி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), பி.வினோபா (இளவாலை கன்னியர்மடம் பாடசாலை), த.விஜித்தா (உடுவில் மகளிர் கல்லூரி).

தரம் 10 - பா.சஜனி (உடுவில் மகளிர் கல்லூரி), பி.பவிதன் (இணுவில் மத்திய கல்லூரி), ப.சிவகாமி (பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்).

தரம் 11- சி.சாம்பவி (உடுவில் மகளிர் கல்லூரி), ச.சஜீவன் (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி), ஜெ.அன்றுஜா (உடுவில் மகளிர் கல்லூரி).

தரம் 12 - ஜெ.றொசனா (உடுவில் மகளிர் கல்லூரி), ம.துளசி (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி), ந.பானுஜா (உடுவில் மகளிர் கல்லூரி).

தரம் 13 - சி.சிவாஞ்சலி (உடுவில் மகளிர் கல்லூரி), தே.ஜெனிபர் றோச்சல் (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி), ச.சுஜனி (உடுவில் மகளிர் கல்லூரி). (203-86)

சங்கானையில் அறநெறிப் பாடசாலை ஆரம்பம்

பண்டத்தரிப்பு,ஜூன்30

சங்கானை நிற்சாமம் கிராமத்தில் அறநெறிப் பாடசாலை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முயற்சிகளை அவ்வூர் ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்டிருந்தனர்.

இதன் பயனாக இந்து கலாசாரப் பேரவைப் பிரதிப்பணிப்பாளர் த.பிரதீஸ்வரன் இதற்கான அங்கீகாரத்தையும், அனுமதியையும் வழங்கியுள்ளார்.

மேற்படி அறநெறிப் பாடசாலையில் பண்ணிசை வகுப்புகள் ஆசிரியை திருமதி எஸ்.மலர்விழியால் நடத்தப்பட்டு வருகின்றன. சமயப் போட்டிப் பரீட்சைகளும் நடத்தப்படவுள்ளதாக அறநெறிப்பாடசாலைத் தலைவர் மா.கணேஸ் தெரிவித்துள்ளார். (203-130)

மாதனை மெ.மி.த.க. மாணவருக்கு உபகரணம்

யாழ்ப்பாணம்,ஜூன்30

பருத்தித்துறை மாதனை மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் கற்றல் உபகரணங்களை மாதனையைச் சேர்ந்த லண்டனில் வசித்து வரும் பூலோகசுந்தரம் சிவகுமார் என்பவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்தப் பாடசாலை மாணவர்களுக்குக் கடந்த வருடமும் இவரினால் கற்றல் உபகணரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203-78)

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள சுயேச்சைக் குழு 1இன் முதன்மை வேட்பாளர் சுபியான் தனது அலுவலகத்தை நேற்று யாழ். ஐந்து சந்திப் பகுதியில் திறந்துவைத்தார். இந்த அலுவலகத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் சுபியான் உரையாற்றுவதையும் ஏனைய விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்: லக்ஸ்மன்)*

நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,ஜூன்30

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலை பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக 'நிக்கொட்' நிறுவன யாழ்.மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.ஆர்.சிவரூபன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராகத் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் கலந்துகொள்வார்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார். பரிசில்களை யாழ். பல்கலைக்கழக விவசாயபீட விரிவுரையாளர் திருமதி அபிராமி சிவரூபன் வழங்குவார். (201)

பயிற்சிகள் ஆரம்பம்

வண்ணை,ஜூன்30

யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியால் இருவேறு பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

கடல்வரைபடம் வாசித்தல், கடலக இயந்திரத் தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவற்றின் தொலைத் தொடர்பாடல் மற்றும் சற்றலைட் இயக்குதல் பயிற்சி நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

வாரத்தில் இருநாள்கள் வீதம் 3 மாதங்கள் பயிற்சிகள் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் ஜூலை மாதம் 27ஆம் திகதிக்கு முன்பாக தமது சுயவிவரக் கோவைகளுடன் 372, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள கல்லூரிக்கு நேரில் வருகை தந்தோ அல்லது 222-6251 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டோ விண்ணப் பங்களைச் செய்துகொள்ளலாமென கல்லூரி உதவிப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (203-160)

உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்துவதன் மூலம் எமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்

கால்நடை உற்பத்தித் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் கருத்து

அச்சுவேலி,ஜூன்30

யாழ்.மாவட்டத்தின் பால் உணவுத் தேவையில் 15 வீதத்துக்குக் குறைவான அளவே உள்ளூர் உற்பத்தி மூலம் நிறைவு செய்யப்படுகின்றது.

மிகுதி 85 வீதத்துக்கு மேற்பட்ட அளவும் இறக்குமதி மூலம் நிறைவு செய்யப்படுகின்றது.

இந்த நிலையை மாற்றி உள்ளூர் உற்பத்தி மூலமே எமது சுயதேவை பூர்த்தி செய்யப்படவேண்டும்.

இதனைக் கருத்திற்கொண்டு முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சகல தரப்பினரும் தங்களது முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும்.

இவ்வாறு கூறினார் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள மாகாணப் பிரதிப் பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம்.

வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அச்சுவேலி பால் உணவுப்பொருள் உற்பத்தி விற்பனை நிலையத்தின் திறப்புவிழா சங்கத்தின் தலைவர் கே.சிவபாலன் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்ட மாகாணப் பிரதிப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு:

தமிழர் வாழ்க்கையின் பாரம்பரிய முதுசொத்து கால்நடை வளர்ப்பு.

கால்நடை [illegible] மூலம் தரமான போஷாக்கு உணவுப் பொருள்களைப் பயன்படுத்தி எமது போஷாக்கு நிலையை மேம்படுத்திக்கொள்வதுடன் விவசாய முயற்சிக்கும் கால்நடைகளின் கழிவுகளைப் பயன்படுத்தி மேல்நிலை பெறலாம்.

கால்நடை வளர்ப்பில் நவீன உத்திகள் தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாட்டை உரியமுறையில் பயன்படுத்தி மேல்நிலை பெறவேண்டும். இந்த வகையில் சர்வதேச தரத்திலான கலப்பு இனங்கள் யாழ்.மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

நிவாரணக் கலாசாரத்தினால் பாதிப்பு

யாழ்.மாவட்டத்தின் பால் உணவுப் பொருள் உற்பத்திக்கு பல்வேறு நிறுவனங்கள் உதவிகளை வழங்கி வருகின்றபோதிலும் மக்களின் ஆர்வம் உரிய துறைசார் நிலையில் குறிப்பிடத்தக்களவுக்கு இல்லாமல் உள்ளது. இதனால் உரிய இலக்கை அடைய முடியாதநிலை காணப்படுகின்றது.

எமது சமூகத்தில் அண்மைக்காலத்தில் உருவாகியுள்ள நிவாரணக் கலாசாரம் எல்லாவற்றையும் இலவசமாக எதிர்பார்ப்பதோடு, எதிலும் தன்னார்வத்தோடு ஈடுபாடு கொள்ளாத இக்கட்டான சமூகச் சூழலையும் உருவாக்கியுள்ளது.

இலவசமாக வழங்கப்படும் பொருள்களை உரிய வளப் பயனபாட்டுடன் பயன்படுத்தி உச்சப் பயன் பெறுவதில்லை.

கால்நடை சுகாதார உற்பத்தித் திணைக்களம் முழுவதும் இலவசம் என்ற கோட்பாட்டை வரவேற்கின்ற நிலையில் இல்லை.

50 வீத முதலீட்டை சொந்தமாகப் பயன்படுத்தும் [illegible]களிக்கு 50 வீத உதவியை வழங்குவதற்குத் தயாராக உள்ளது.

இந்தவகையான வேலைத்திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் நிறைவு செய்வதற்கு முன்வரவேண்டும் என்றார்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் உரையாற்றுகையில்:

தட்டுப்பாடு ஏற்படும்போது நுகர்ச்சியை நோக்காகக் கொண்டு மேல் நிலை பெறும் நிறுவனங்கள் சில தட்டுப்பாடு நீக்கும்போது வீழ்ச்சி அடைவதும் தனது நோக்கத்தைக் கைவிட்டு விடுவதும் வரவேற்கத்தக்கது அல்ல.

இந்த நிலை நிதி நிலையை அடிப்படையாகக் கொண்டே உருவாகிவிடுகின்றது. இந்த நிலை எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது.

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் பால் உணவுப் பொருள் உற்பத்தியிலும் அவற்றை உரிய தரநிலைக் கட்டுப்பாடுகளுடன் நியாயவிலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்கும் வந்திருப்பது வரவேற்புக்கு உரியதாகும் எனக் கூறினார்.

அச்சுவேலி இலங்கை வங்கியின் முகாமையாளர் த.புவனேந்திரன், வலி. கிழக்குப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.மகேந்திரம், வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் த.நடராசா, 'நிக்கொட்' நிறுவனத்தின் மாவட்ட பொறியியலாளர் எஸ். சிவரூபன், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசத் தலைவர் க.கமலநாதன், 'லாண்டோலேக்' நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.இராஜகுரு உட்பட பலர் உரையாற்றினர். (203-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் பதவி; நியமனம் குறித்து அடிப்படை உரிமை மீறல் மனு

கொழும்பு, ஜூன் 30

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள தமிழ்த் துறை விரிவுரையாளர் பதவிக்கு மிகுந்த தகுதி உடையவரை நியமிப்பதில் மோசடிகளும், குளறுபடிகளும், ஒழுங்கீனங்களும் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த பதவிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றியவரான ஸ்ரீ.பிரசாந்தன் என்பவர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரரைக் காட்டிலும் தகைமைகள் குறைந்த ஒருவரை பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை விரிவுரையாளராக நியமிக்க உயர்மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என அந்த மனுவில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனவே தகைமைகள் குறைவான ஒருவரை குறித்த பதவிக்கு நியமிக்கக் கூடாதென சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

இம்மனுவில் பேராதனைப் பல்கலைக் கழகம், அதன் துணைவேந்தர் பேராசிரியர் எச்.அபேகுணவர்த்தன, பல்கலைக்கழகத்தின் பிரதித்துணை வேந்தர் பேராசிரியர் ஏ.விக்ரமசிங்க, பேராதனைப் பல் கலைக் கழக பேரவை உறுப்பினர்கள், நேர்முகத் தேர்வு நடத்திய தமிழ்த்துறை பேராசிரியர்கள் இருவர், நேர்முகத் தேர்வில் பங்கு பற்றிய சக விண்ணப்பதாரிகள், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மனுதாரரின் கல்வித் தகைமைகள், தமிழ்த்துறைசார் புலமைகள், இலக்கிய சாதனைகள், விருதுகள், வெள்ளிப் பதக்கங்கள், பாராட்டுப் பத்திரங்கள், பல்துறை ஆளுமைகள், உயர் தொழில் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் என்பன குறித்து நீதி மன்றத்திற்கு ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற நேர்முகப் பரீட்சைக்கு பங்குபற்றியவர்களின் முதுமாணிப் பட்டம் உடையவர் மனுதாரர் மாத்திரமே என்றும் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவரப்பட் டுள்ளது.

அத்துடன் மனுதாரர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தற்சமயம் தமிழ்த் துறை விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார் எனவும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. ஆனால், நேர்முகத்தேர்வை நடத்திய தமிழ்த்துறைப் பேராசிரியர்களில் ஒருவர் மனுதாரரைக் காட்டிலும் தகைமைகள் குறைவான ஒருவரை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை விரிவுரையாளர் பதவிக்கு சிபாரிசு செய்துள்ளமை மனுதாரரின் அடிப்படை உரிமைகள் மீதான அப்பட்டமான மீறுகை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இம்மனு மீதான பூர்வாங்க விசாரணைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. மனுதாரர் சார்பில் சட்டத்தரணி கந்தையா நீலகண்டனின் நெறிப்படுத்தலில் ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஆர்.சுரேந்திரன், சட்டத்தரணி என்.காண்டீபன் ஆகியோர் ஆஜராகியுள்ளனர். அரச தரப்பில் சொலிஸ்டர் ஜெனரல் விவேகா ஸ்ரீவர்த்தன ஆஜராகியுள்ளார். உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழு பிரதிவாதிகளுக்கு மன்றில் ஆஜராக கோரும் அறிவித்தலை விடுத்துள்ளது.

(அ-சி)

கசிப்பு முகவர் பிடிபட்டார்

நாவற்குழி, ஜூன்30

ஏழாலைப் பகுதியில் இருந்து எடுத்து வரப்பட்ட நாற்பது போத்தல் கசிப்பு உரும்பிராயில் வைத்து பறிமுதல் செய்யப்பட்டு நிலத்தில் ஊற்றப்பட்டதுடன் கொண்டு வந்த நபரும் கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டார்.

இச்சம்பவம் உரும்பிராய், பலாலி வீதியில் கடந்த 23ஆம் திகதி அதிகாலை 4.45மணிக்கு இடம்பெற்றது.

ஏழாலையில் உற்பத்தி செய்யப்பட்ட இக் கசிப்பு யாழ்.நகரப்பகுதிக்கு அதிகாலை சைக்கிளில் கொண்டு வரப்பட்டது.

பலாலி வீதியால் கொண்டு வரப்பட்ட இக் கசிப்பை அங்குள்ள விழிப்புக் குழுவினர் மடக்கிப் பிடித்ததுடன் கொண்டு வந்தவரையும் தப்பி ஓட முடியாதவாறு பிடித்தனர்.

கைப்பற்றப்பட்ட கசிப்பு முழுவதும் நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டது.

இந்நபர் ஏழாலை கிழக்கைச் சேர்ந்தவர் என்பது விசாரணையின் மூலம் அறியப்பட்டது. (203 - 288)

உணவுக்கான வேலைத்திட்டம் சண்டிலிப்பாயில் ஆரம்பம்

நவாலி, ஜூன்30

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உணவுக்கான வேலைத்திட்டம் மீண்டும் அடுத்தமாதம் தொடக்கம் 11 நாள்களுக்கு மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ் வேலையில் பங்கு பற்றுபவர்கள் ஆண், பெண் யாராக இருந்தாலும் 6மணித்தியாலம் கட்டாயம் வேலை செய்ய வேண்டும்.

இதன் ஊதியமாக ஒரு நாளைக்கு இரண்டரை கிலோ உணவு வழங்கப்படும்.

குடும்பத்தில் யாராவது ஒரு அங்கத்தவர் கட்டாயம் பங்கு பற்ற வேண்டும்.

யாருடைய உதவியுமில்லாத வயோதிபர்கள் தமது பெயரை பதிந்து விட்டு அவ்விடத்தில் இருக்கலாம்.

இவர்களுக்கு மனிதாபிமான முறையில் இச்சலுகை வழங்கப்படுகிறது.

இவ்வாறு வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தெரிவித்துள்ளார். (203- 100)

சுயதொழில் கொடுப்பனவு

நவாலி,ஜூன்30

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுயதொழில் முயற்சிக்கு விண்ணப்பம் செய்தவர்களின் காசோலைகள் வந்து சேர்ந்துள்ளன.

கீழ்க்காணும் பெயர், முகவரியுடையவர்களை உடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். அருந்தவராசா கேட்டுள்ளார். கு.மனோரஞ்சிதம் - திரேசம்மா கோயிலடி, சண்டிலிப்பாய், மேரி கலிஸ்ரா - இளவாலை.

அனர்த்த நிவாரண வீடமைப்புக் கொடுப்பனவு மாணிக்கம் செல்வராசா - இளவாலை.

மாற்றலுடையோருக்கான கொடுப்பனவு மயில்வாகனம் கும ரேசன் - ஜே/140, பொன்னாலை வீதி, மானிப்பாய்.

(203-100)

SUBRA (14)
சித்தன்கேணி - வட்டுக்கோட்டை
இரு இடங்களிலும் ஒரேநேரத்தில்
அரச உத்தியோகத்தர்களுக்கான
ஆங்கிலம் by BRITTO
சிங்களம் by prof. ஸீலாகிருஷ்ணன்
ஆரம்பம் 02.07.2009 மாலை 5.50 மணி
(நேரம் உங்களுக்கு ஏற்றவகையில் சீர்செய்யலாம்)
(7128387)

உதைபந்தாட்டப் போட்டிகள் பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன்30

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம் 13 வயதுப் பிரிவு மாணவர்களிடையே எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்க இணைப்பாளரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பிரதேச பாடசாலைகள் நெல்லியடி ம.ம.வியில் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் எஸ்.இராஜசீலனிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

கண்ணீர் அஞ்சலி

கச்சாய் அ.த.க. பாடசாலை ஆசிரியை
திருமதி சுசிலாதேவி ஜெகநாதன்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி
சின்னத்துரை தங்கமுத்து
28.06.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அவரது இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் அ.த.க. பாடசாலை,
கொடிகாமம்.
ஆசிரியர் ந.மு.சங்கர்
(அ/559275)

நவாலியூர் அமரர் செ.சதீஷ் நினைவாக

மறைந்த சமுர்த்தி அலுவலர்
செ.சதீஷ் (S.D.O)
ஞாபகார்த்தமாக
HSCMF - நிறுவனத்தினரால்
விசேட தேவை
உடையவர்களுக்கான
உதவியும் - கருத்தரங்கும்
30.06.2009 பி.ப. 2.30மணி
நவாலி மகா வித்தியாலயம்

HSCMF SRI LANKA

*பிரதம விருந்தினர் : திரு.மரியதாசன் ஜெகூ (SLAS)
(பிரதேச செயலர் - சண்டிலிப்பாய்)
*சிறப்பு விருந்தினர்கள் :
திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் (SLAS)
(உதவி பிரதேச செயலர் - சண்டிலிப்பாய்)
திரு.வி.அருந்தவராசா (S.S.O)
(சிரேஷ்ட சமூகசேவை அதிகாரி - சண்டிலிப்பாய்)
திரு.இரா.வசந்தகுமார்
(முதல்வர் - நவாலி மகா வித்தியாலயம்)
*கௌரவ விருந்தினர்கள்:
திரு.அ.தனபாலரத்தினம் (கிராம அதிகாரி),
திரு.கு.எழிற்செல்வன் (கிராம அதிகாரி)
திரு.ரி.நித்தியானந்தன் (கிராம அதிகாரி)
விசேட உரை: பசுமைப் புரட்சியாளர்
திரு.வை.செகராஜசிங்கம் (ச.நீ)
அஞ்சலி பாடல்: நவாலியூர் நாயகி
திருமதி மேரிநாயகி மரியதாசன்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்வு சிறக்க: பலசரக்கு விற்பனையில்
முன்னோடியாக விளங்கும்
SUTHAS STORES
ARASADY, NAVALY

பேக்கரி மற்றும் ஹோட்டலுக்குத் தேவையான இயந்திரங்கள்

சுயதொழில் ஒன்றை ஆரம்பிக்கவிருக்கும் உங்களுக்கு ....

பிற இடத்தில் இருந்து பேக்கரி உண்டிகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் உங்களுக்கு ...

30 வினாடிகளில் உற்பத்தி செயற்பாட்டை ஆரம்பிக்கக் கூடிய பூரணமான ஷெரி பேக்கரி தொகுதியொன்று

- பேக்கரி மற்றும் ஹோட்டல் கைத்தொழிலுக்குத் தேவையான அனைத்து இயந்திரங்களும் ஒரே கூரையின் கீழ்
- ஓர் ஆண்டிற்கான பூரண உத்தரவாதம்
- 24 மணி நேரமும் செயற்படும் விற்பனைக்குப் பின்னரான தரமான சேவை (தேவையான அளவு உதிரிப்பாகங்கள்)
- மாதம் முழுவதும் திறந்திருக்கும் மாலம்பே, குருணாகல், காலி காட்சியறைகள் (போயா தினங்கள் தவிர்ந்த)
- கட்டணம் செலுத்தப்பட்டதும் நாடு முழுவதற்கும் போக்குவரத்து வசதி இலவசம்
- உண்டிகளைத் தயாரித்தல் தொடர்பாக அனுபவம் பெற்ற பேக்கரியாளர்களினால் பயிற்சி இலவசம்
- தேவையான அளவு கையிருப்புக்கள்
- நிதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
ஹேமி மாண்
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
077 4140138
077 7427777
021 7900022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அமுதசுரபி' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 30

நயினை நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் ஐம்பதாவது ஆண்டு விழாவையொட்டிய பொன்விழாவும் ''அமுதசுரபி'' மலர் வெளியீடும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அமுதசுரபி கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கத் தலைவர் ப.க.பரமலிங்கம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்து கொள்வார்.

''அமுதசுரபி'' மலரை மலர் குழுத் தலைவர் அ.சர்வானந்தராசா வெளியிட்டு வைக்கவுள்ளார். (201)

பயிற்றுவிப்பாளர்களுக்கு விண்ணப்பம் கோரல்

நாவற்குளி, ஜூன் 30

சமூக நலத்துறைத் திணைக்களத்தினால் சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடத்தப்படவுள்ள மாற்று ஆற்றலுடையோருக்கான மின்சார உபகரணங்கள் திருத்தும் பயிற்சி நெறிக்கு தகுதிவாய்ந்த பயிற்றுவிப்பாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பயிற்றுவிப்பாளர்களாக விண்ணப்பிப்போர் ஏற்கனவே பயிற்சி ஆசிரியர்களாகக் கடமையாற்றிய அனுபவம் மற்றும் சைகைமொழி தெரிந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

செவிப்புலனற்ற வாய்பேச முடியாதவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் இருவார காலத்திற்குள் கிடைக்கக் கூடியதாக மாவட்ட அலுவலர், சமூக நலத்துறைத் திணைக்களம், மாவட்ட அலுவலகம், இல.48, காட்டுக்கந்தர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு மாவட்ட அலுவலர் ஆ.ஞானவேல் கேட்டுள்ளார். (203-288)

குடாநாட்டின் பிரதேச செய்திகள்

விளையாட்டுப் போட்டிக்கு பதிவுகள் செய்யலாம்

ஆனைக்கோட்டை, ஜூன் 30

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு பிரதேச சபையால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விளையாட்டுப் போட்டிக்கு சனசமூக நிலையங்கள் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்யுமாறு மேற்படி பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார்.

மானிப்பாய் பட்டின சபை, மானிப்பாய் கிராம அலுவலகம், பண்டத்தரிப்பு பட்டின சபை, பண்டத்தரிப்பு கிராம அலுவலகம் ஆகியவற்றுடன் அந்தத்தப் பிரதேசத்தில் இருக்கும் சனசமூக நிலையங்கள் தொடர்பு கொண்டு போட்டியாளர்களின் பெயர் விவரங்களைப் பதிவு செய்யலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (203-20)

முதியோர் இல்லத்துக்கு கூரை விரிப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு யு.என்.எச்.சி. ஆர். நிறுவனம் பத்து கூரைவிரிப்புகளை வழங்கியுள்ளதாக முதியோர் இல்ல அத்தியட்சகர் தெரிவித்தார். (203-224)

குடாக்கடல் நீரேரி மூலம் ஆழ்கடல் சென்று மீன் பிடிப்பு

வண்ணை, ஜூன் 30

யாழ்.குடாக்கடல் நீரேரியால் ஆழ்கடல் சென்று மீன் பிடிக்கும் நடைமுறைகள் இப்பொழுது குருநகர் இறங்குதுறையில் இருந்து ஆரம்பமாகியுள்ளது.

'நைலோன்' வலை தொழில், பிளாஸ்ரிக் படகுகளில் ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடித்தல் போன்றன இடம்பெற்று வருகின்றன.

எனினும் முன்னரைப் போன்று பெரிய மரப்'போட்'களில் சென்று மீன் பிடிக்கும் செயற்பாடுகளைக் குருநகர் மீனவர்கள் இன்னமும் ஆரம்பிக்கவில்லை.

அதேவேளை பாலைதீவு, இரணை தீவு, கக்கடதீவு ஆகியதூர தேசங்களுக்குச் சென்று மீன் பிடித்தலும் இடம்பெற்று வருகின்றன.

'ரோலர்' தொழில் செய்வதற்கு தொடங்கவில்லை. இரவுநேர தொழிலுக்கு செல்வோர் இறங்குதுறைப் பகுதியில் பதிவை மேற்கொண்டு சென்று மறுநாள் காலையிலேயே கரை திரும்ப அனுமதிக்கப்படுகின்றனர்.

எவ்வாறாயினும் மீன்பிடித் தொழிலில் அபரிமித அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதால் கடலுணவு வகைகளின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கூறினர்.

10 ஆயிரம் விலை போகக் கூடிய கடலுணவு வகைகளான மீன், இறால், கணவாய், நண்டு ஆகியன 5 ஆயிரம் ரூபாவரையே சந்தைகளில் விலை போவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

குருநகர்ப் பகுதியூடாக பிடித்து வரப்படும் கடலுணவு வகைகள் மட்டுமல்லாமல் வடமராட்சி, தீவுப் பகுதி, தென்மராட்சிப் பிரதேசங்களில் பிடிபடும் மீன் வகைகளும் சந்தைப்படுத்த யாழ்-பண்ணை மற்றும் சின்னக்கடை மீன் சந்தைகளுக்கு கொண்டு வரப்படுவதால் மேற்படி விலை வீழ்ச்சி ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. (203-160-236)

குப்பி விளக்குச் சரிந்து தீப்பிடித்ததில் கர்ப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

உறங்கிக் கொண்டிருந்தபோது விளக்குத் தட்டுப்பட்டு விழுந்து தீப்பற்றிக் கொண்டதால் படுகாயமடைந்ததாகத் தெரிவித்து குடும்பப் பெண்ணொருவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் திருநகர், இராஜசிங்கம் வீதிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான பகீரதன் நூர்ஜகான் (வயது 22) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். (203-78)

முருகையன் ஓர் இலக்கிய சக்தி அனுதாபச் செய்தியில் டக்ளஸ்

ஈழத்தில் மரபு வழிக் கவிதையைத் தொடர்ந்து வளர்த்தெடுப்பதிலும் அதனது இருப்பைப் பேணிப் பாதுகாப்பதிலும் மிக முக்கிய பணிகளை ஆற்றி வந்துள்ள கவிஞர் இ.முருகையன் அவர்களது இழப்பு தமிழ் இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய இயலாததொரு பாரிய இழப்பாகும்.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். கவிஞர் இ.முருகையன் அவர்களது மறைவையிட்டு அமைச்சர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் புதுக்கவிதைத்துறையானது மிகவும் வீச்சு பெற்றிருந்த 80 களில் கூட புதுக் கவிதையாளர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் இரசிக்கக் கூடிய வகையில் அனைவராலும் இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில், இலக்கணம் பிசகாமல், உயிரோட்டமான சொற்பிரயோகங்களுடன் மரபுக் கவிதைகளைப் படைத்து மரபுக் கவிதைகளின் இருப்புக்கு உறுதி ஏற்றிருந்த மாபெரும் சக்தியாக கவிஞர் இ.முருகையன் திகழ்ந்தார்.

தமிழ் நாடகத்துறை சார்ந்த அன்னாரது பங்களிப்புகளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தார் இலக்கிய உலகத்தார், நண்பர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் அனைவருடன் நானும் எனது கட்சியினரும் துயரங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தின் பயனாளியான வேலணை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த திருமதி சந்திரமலரின் மரணப் பணிக் கொடைக்கான காசோலையை யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் சகோதரி யோசெப் மீனாட்சியிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். பாதுகாப்புச் சபையின் மாவட்ட இணைப்பதிகாரி திருமதி ரேவதி தர்மகுமாரும் படத்தில் காணப்படுகிறார். (படம்:லக்ஸ்மன்)

உணவுப் பயிர்ச் செய்கையில் அதிகளவு இரசாயனம் பயன்படுத்துவதால் புற்றுநோய் ஏற்படும் அபாயம்

மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை விடுக்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 30

விவசாயிகள் உணவுப் பயிர்ச்செய்கையில் அளவுக்கதிகமாக இரசாயன மருந்துகளைப் பயன்படுத்துவதாலும் புற்றுநோய் ஏற்பட வாய்ப்பிருக்கிறது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

'இன்று பயிரிடுவோம் நாளை அறுவடை செய்வோம்' என்ற தொனிப் பொருளில் யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றது.

இதனைக் கட்டுப்படுத்த சுகாதாரப் பிரிவினர் மிகத் தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடும்போது அளவுக்கதிகமான இரசாயன மருந்துகளைப் பாவிக்கின்றனர்.

அத்தகைய பயிர்களில் அறுவடையின் பின்னர் குறிப்பாக மரக்கறி வகைகள், கீரை வகைகள் என்பவற்றை மக்கள் உணவில் சேர்த்துக் கொள்ளும்போது இரசாயன மருந்துகளினால் [illegible] புற்றுநோயினை [illegible] சாதர்ப்பம் ஏற்படுகின்றது.

எனவே விவசாயிகள் உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றபோது அதிகளவு இரசாயன மருந்துகளைப் பாவிப்பதைத் தவிர்த்துக் கொண்டால் ஆரோக்கியமாக இருக்குமென்று கருதுகிறேன்.

விவசாயிகள் உணவுப் பயிர்ச் செய்கையில் இரசாயன மருந்துகளைப் பாவிப்பதால் புற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்பம் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்காக விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு விவசாயிகள் தமது ஒத்துழைப்பினைப் பூரணமான முறையில் வழங்க வேண்டும் -என்று அவர் மேலும் தெரிவித்தார். (203-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 30

மல்லாகம், கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலய சண்டேஸ்வரர் சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (201)

* * *

வடமராட்சி, ஜூன்30

அல்வாய் வடக்கு, வியாபாரி மூலை பத்திரகாளி அம்பாள் சமேத ஆதிசிவ வீரபத்திரர் ஆலய சம்புரோஷண மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகப் பெருஞ்சாந்திக் கிரியைகள் கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறுகிறது. நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (201-236)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்.30

அச்சுவேலி, தோப்பு போதிராம்பிட்டி (போசி) பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (201)

குருநகரில் ஈரோஸ் அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

ஈரோஸ் அலுவலகம் நேற்று முன்தினம் மாலை குருநகரில் திறந்து வைக்கப்பட்டது. குருநகர் சேமக்காலைச் சந்தியில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள மாநகரசபைத் தேர்தல் பணிகளுக்காக இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக அதன் அமைப்பாளரான யே.சுதாகரன் டெல்சன் தெரிவித்தார்.

அலுவலகச் சுவரில் வெற்றிலைச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. (1-120)

உடுவில் பிரதேசத்தில் பாதீனியம் அழிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பரவலாக வளர்ந்து காணப்படும் பாதீனியச் செடிகளை அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் ஏனைய வெளிக்கள அலுவலர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் மூலம் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக இப்பணி விரைவு படுத்தப்பட்டுள்ளது.

பாதீனியம் செடியழிப்பு நடவடிக்கைகளில் பொதுமக்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் எனப் பல பொது அமைப்புகளும் தத்தம் பகுதிகளில் உள்ள பாதீனியம் செடிகளை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதே போன்று பாடசாலைகள், அரச திணைக்களங்களின் காணிகளில் உள்ள பாதீனியம் செடிகளை அழிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள தனியார் காணிகள் மற்றும் பொது இடங்களில் பாதீனியம் அழிக்கப்படாது இருந்தால் பொலிசாரின் உதவியுடன் உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203)

மானிப்பாயில் டெங்கு கருத்தரங்கு

ஆனைக்கோட்டை, ஜூன்30

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் அனுசரணையில் வலி.தென்மேற்கு பிரதேச சபை ஒழுங்கு செய்துள்ள டெங்கு நோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறுமாறும் மேற்படி பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (203-20)

இருபது வருடங்களில் அழிந்துபோனவற்றை இரண்டு வருடங்களில் நாம் கட்டியெழுப்புவோம்

யாழ்.வர்த்தகர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

கடந்த இருபது வருடங்களில் அழிவடைந்த எமது பிரதேசத்தை நாம் அனைவரும் ஒன்றிணைந்து இருவருடங்களில் கட்டியெழுப்புவோம். இவ்வாறு கடந்த புதன்கிழமை யாழ். வர்த்தகர்களுடன் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். கடந்த புதன்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக சமூக பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற பொதுச்சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏறக்குறைய ஐநூறிற்கும் மேற்பட்ட யாழ். வர்த்தகர்கள் பங்கு கொண்ட இச்சந்திப்பில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தவை வருமாறு:

நாங்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆள்வதற்காக அல்ல! மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கும் வர்த்தகர்களாகிய நீங்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் தொழில் செய்வதற்குமே ஆகும். இதன் அடிப்படையிலேயே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் தீர்மானத்தை நாம் ஏற்றிருக்கின்றோம். மகிழ்ச்சிதரும் மாற்றங்களையே நாம் விரும்புகின்றோம். இதில் ஏமாற்றங்கள் நிகழுமாயின் அதற்கான அனைத்து பொறுப்பையும் நாமே ஏற்றுக்கொண்டு எமது தீர்மானங்களை திருத்தி எழுதவும் நாம் என்றும் தயாராக இருப்போம். ஆனாலும் நாம் எடுத்திருக்கும் இந்தத் தீர்மானம் ஒருபோதும் தோற்றுப் போகாது. ஈ.பி.டி.பியினராகிய நாம் தமிழ் பேசும் மக்களுக் கான ஒரேயொரு தனித்துவமான அரசியல் கட்சி என்ற ரீதியில் எமது தனித்துவங்களோடு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப் போடு தோழமை கட்சியாக இணைந்து எமது மக்களின் இலட்சியக் கனவுகளை விரைவாகவும், இலகுவாகவும் எட்டுவதற்காக இந்தத் தீர்மானத்தை ஒரு பரீட்சார்த்த முயற்சியாக எடுத்திருக் கின்றோம் என்றார்.

இதனைத் தொடர்ந்து வர்த்தகர்களினால் கேட்கப்பட்ட கேள்விகள் சந்தேகங்கள் அனைத்திற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விரிவாக விளக்கமளித்தார். இக்கூட்டத்தின் இறுதியில் எமது தேசத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைவோமா? என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கேட்டபோது அனைத்து வர்த்தகர்களும் கரகோசம் எழுப்பி ஒன்றிணைவோம் எனப் பதிலளித்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

நீர்வேலியில் சருகு புலியின் நடமாட்டம் அதிகரிப்பு

நீர்வேலி மேற்குப் பகுதியில் சருகு புலி எனப்படும் ஒருவகை விலங்கினால் அப் பகுதியில் கால்நடைகள் அழிக்கப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த தோட்டப் பகுதிகளில் கட்டப்பட்டிருக்கும் மாட்டுக் கன்றுகள் மற்றும் ஆடுகள் போன்றவற்றை இம்மிருகம் கடித்துக் குதறிக் கொல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை பெரிய பசுமாடு ஒன்று இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து தோட்டப் பகுதிகளில் கால்நடைகளைக் கட்டுவதை மக்கள் தவிர்த்து வருகின்றார்கள்.

இதேவகை விலங்கினம் கடந்த 2வருடங்களுக்கு முன்னதாகவும் இப்பகுதிகளில் கால்நடைகளை அழித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (203-72)

ஒலிபெருக்கிச் சாதனம் அன்பளிப்பு

கெருடாவில், ஜூன்30

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்துக்குத் தொண்டைமானாறு நற்பணி மன்றத்தின் கனடாக் கிளையினர் மேற்படி வித்தியாலய அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு லட்சம் பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்த அன்பளிப்பு நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி வித்தியாலய அதிபர் தலைமையில் இடம்பெற்றது. (201-253)

வாழ்த்துகின்றோம்

பொன் விழா கண்ட
அண்ணா
தொழிலகம்
மேன் மேலும் சிறந்து
விளங்க
வாழ்த்துகின்றோம்.
கே.ஆர்.விஜயகோபால்,
மில்க்வைற் சோப்,
இண்டஸ்றியல்.
மில்க்வைற் இல்லம்,
யாழ்ப்பாணம்.
(85987)

புனித யாத்திரைத் தலமான
புங்குடுதீவு அருள்மிகு அந்தோனி முனீந்திரர்
ஆலய உயர் திருவிழா

கொடியேற்றம்: 03.07.2009 வெள்ளி பிற்பகல் 4.00 மணி
தேர்: அருட் தந்தையர் ஆர்ஸ்றோங் அடிகளார்
வேண்டுதல் தேர்: நோயாளிகள், குழந்தைகளுக்கான நலவாழ்வு திருப்பலி (பூஜை) பிற்பகல் 5.00 மணி
தீர்த்தோற்சவ விழா: (2ஆம் திருவிழா) 04.07.2009 சனி பிற்பகல் 4.30 மணி
வேண்டுதல் தேர்: வயோதிபர் பொதுவான அல்லாதோர் மக்களின் மாண அனாதி வேண்டியும் இறந்த ஆன்மாக்களின் இளைப்பாற்றிக்காகவும் திருப்பலி (பூஜை) பிற்பகல் 5.00 மணி
தீர்த்தோற்சவ விழா - அருளாரி
3ம் திருவிழா - 05.07.2009 ஆயர்தினமும் மரியாள் விழா
வேண்டுதல் தேர்: "தாய்மார் தினமான, நிலையான மாதாவாகி"
காலை 7 மணி - இரவு வேளாவி, கூட்டு வழிபாடு
காலை 8.30 மணி - திருவிழா திருப்பலி (பூஜை)
காலை 9.30 மணி - நற்செய்தியான ஆராதனையும் அற்புதமான அந்தோனி முனீந்திரர் தேர்பவனி, அருளாரி
பொது தனிப்பட்ட கோரிக்கைக்காக கூடி வழிபட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் காணிக்கை/ நன்கொடை யை 05.07.2009இற்கு முன் பின்வரும் முகவரியில் வழங்கலாம்.
1. இறை தொண்டர்: திரு.சை.முத்துலிங்கம், புங்குடுதீவு-2
2. அருள் தொண்டர்: திரு.அ.பொ.மகேந்திரன், இல.75, மேற்கு மார்க்கட், யாழ்ப்பாணம்.
புங்குடுதீவு. நிர்வாகம், அருள் மிகு அந்தோனியார் ஆலயம்.
(85989)

இந்தியாவில் படியுங்கள் @
பிரிந்தாவன் கல்லூரி
B.Sc B.B.M. B.C.A. B.Com.
பங்களூர்
பல்கலைக்கழகத்துடன்
இணைந்தது
2 A/L சித்தியுடன் இணைக
ஜூலையில் பாடங்கள் ஆரம்பம்
மேலதிக விவரங்களுக்கான
தொடர்பு: 0777 317043

10ஆம் ஆண்டு நெஞ்சில் நீங்கா நினைவலைகள்
செல்வி
ஜீத் சிவசத்தியபாலன்



மண் மகிழ 03.03.1983 கண் நெகிழ 30.06.1999

ஈரைந்து ஆண்டுகள் சென்றதம்மா! உன்
பிரிவால் பெருகும் கண்ணீர் வற்றவில்லை அம்மா!
பிரிய மகளே ஜீத் உடலால் பிரிந்தீர் ஆயினும்
உயிரில், உணர்வில் கலந்து ஒளிர்கின்றனையே!
உயிரின் உயிரான எம் செல்வமே! உத்தமமான
உன் புனித ஆத்மா நித்தியமாய்
என்றென்றும் அம்பிகையின் பாதமலரினை
அலங்கரிக்கும் புனித மலராய்
வீற்றிருக்க வேண்டுமெனப்
பிரார்த்தனை செய்து மனவமைதி
பெற முயற்சிக்கின்றோம்.

சூராவத்தை, சுன்னாகம். அப்பா, அம்மா, சகோதரர்கள்.
(86472)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சங்கரப்பிள்ளை உதயகுமார்
(சூட்டி)
மண்ணுலகில் 18.05.1961 விண்ணுலகில் 30.06.2007
எம் குடும்ப ஒளிவிளக்கே! எம் உறவே!
ஓராண்டு சென்றாலும் உம்
நினைவு எம்முடனேயே!
தகவல்: குடும்பத்தினர்.
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.
(D/559203)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 ✱ 01 ✱ 1940
மறைவு 11 ✱ 07 ✱ 2008

அமரர் முத்தையா பாலச்சந்திரன்
திதி: அட்டமி
பாசதீபம் அணைந்து ஓராண்டு ஓடியதே!
இங்கே நிதமும் வேதனைக் கீற்றால் நொந்து போகின்றோம்
எங்களின் துயரம் ஆற்ற யாருமில்லை
இதயம் உருகிட அஞ்சலி செய்கின்றோம்.
மீசாலை மேற்கு, மீசாலை.
பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.
(86643)

அழியாத நினைவுகளுடன்
ஆண்டு மூன்றில்

ஆண்டவன் படைப்பில் 02 ✱ 07 ✱ 1966
ஆண்டவன் மடியில் 04 ✱ 07 ✱ 2006

அமரர் கோபாலபிள்ளை விமலதாசன்
(நிலஅளவைத் திணைக்களம், வவுனியா)
திதி: நவமி
ஆண்டுகள் மூன்று ஆனதுவோ
எங்கள் அருமை அப்பா எங்களைப் பிரிந்து
ஏற்கமுடியவில்லையே உங்கள் பிரிவை
பிரிந்து சென்றதன் காரணம் எமக்குப் புரியவில்லையே
எங்கள் துயர் ஆறவில்லையே அப்பா
ஆண்டுகள் மூன்றல்ல எத்தனையானாலும்
உங்கள் நினைவுகள் எமை விட்டகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
இந்துப் பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு.
என்றும் நினைவுடன்: மனைவி, மக்கள், குடும்பத்தினர்.
(85970)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண மட்ட விளையாட்டுக்களில் கலந்து கொள்ள முதலாவது அணி இன்று மன்னார் புறப்படுகிறது

வலி. வடக்கு, ஜூன் 30

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ். மாவட்ட அணிகளில் ஒரு பகுதியினர் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து புறப்படவுள்ளனர்.

வடமாகாண பாடசாலை அணிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 123 வீரர்களும் 99 வீராங்கனைகளுமாக மொத்தம் 222 பேரும் இவர்களுடன் 41 ஆசிரியர்களும் பயணமாகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்து கொள்வதற்காக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் குறிகட்டுவான் ஊடாக கடற்படையினரின் உதவியுடன் கப்பலில் செல்லவுள்ளனர்.

இந்த அணியின் ஆண்கள் கபடி அணி ஆண்கள் பெண்களுக்கான எல்லே உடற்பயிற்சி அணிகள் இடம்பெறவுள்ளன.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் ஆண்கள், பெண்களுக்கான கபடி போட்டிகள் 3 ஆம் திகதியும் எல்லே போட்டிகள் 4 ஆம் திகதியும் உடற்பயிற்சிப் போட்டிகள் 5ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

(50-86)

மாகாணமட்டக் குழுநிலைப் போட்டி 3 ஆம் திகதி மன்னாரில் ஆரம்பம்

வலி.வடக்கு, ஜூன்30

வடமாகணத் திணைக்களத்தால் மாகாண மட்டத்தில் நடத்தப்படவுள்ள குழுநிலைப் போட்டிகள் எதிர்வரும் மூன்றாம் திகதி மன்னார் பொது விளையாட்டு மைதானத்திலும், மன்னார் புனித சேவியர் ஆண்கள் பாடசாலையிலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 10 ஆம் திகதி வரை போட்டிகள் இடம்பெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இருந்தும் இப்போட்டியில் மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (203-86)

யூனியன் கல்லூரியுடனான ஆட்டத்தில் மத்திய கல்லூரி 49 ஓட்டங்களால் வெற்றி

வலி.வடக்கு, ஜூன் 30

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்படும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 49 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 46.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நிரோஜ் 53 ஓட்டங்களையும் லக்சன் 48 ஓட்டங்களையும் டார்லின் 25 ஓட்டங்களையும் சகேஸ்காந் 18 ஓட்டங்களையும் நிரஞ்சன் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 56 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யூனியன் கல்லூரியைச் சேர்ந்த அன்ராஜ் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்ட மற்ற ஓவருடன் 36 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் டிசாந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி 06 ஓட்டமற்ற ஓவர்களுடன் 34 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் மகிழ்ராஜ், சிந்தாகரன், ஜெரூசன் முறையே 16, 33, 51 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளார்கள்.

246 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 46 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆகாசன் 29 ஓட்டங்களையும் ஜெரூசன் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 40 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாண்ம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த அனுசாந் 09 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 45 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் நிரூபன் 09 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் ரஜீவ் 09 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர்களுடன் 56 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் டார்லின், ஸ்ரீபவன் முறையே 16, 37 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

(50-86)

தாச்சி கூற்றுப் போட்டியில் தாவடி காளியம்பாள் வெற்றி

வலி.வடக்கு, ஜூன் 30

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவுடன் உடுவில் தாவடி சிந்து விளையாட்டுக் கழகம் தாச்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய தாச்சி விளையாட்டுப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் சிந்து விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் வெஸ்ரோம் விளையாட்டுக் கழகமும், தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் சம வலுவுடன் மோதிக் கொண்டதுடன் போட்டி முடிவடையும்வரை எந்த அணி வெற்றிபெறும் என்று கூற முடியாத அளவுக்கு இரு அணிகளும் விளையாடி ரசிகர்களைப் பரவசப்படுத்தின.

போட்டி முடிவடையும் வரை இரு அணிகளும் மாறிமாறி பழங்களைப் பெற்று தொடர்ந்து சம நிலைமையிலேயே காணப் பட்டன.

இரு அணிகளும் தலா 04 பழங்கள் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட மேலதிக நேரத்தின் போது தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 02 பழங்களையும் வெஸ்ரோம் விளையாட்டுக் கழகம் 01 பழத்தையும் பெற்றுக் கொண்டன.

இதனைத் தொடர்ந்து காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 6:5 பழங்கள் என்ற நிலையில் மானிப்பாய் வெஸ்ரோம் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று சம்பியனாகியது. (50-86)

கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் யாழ்ப்பாணத்தில் இருந்து 16 பேர் சித்தி

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் சென்ற மாதம் நடத்தப்பட்ட புதிய கரப்பந்தாட்ட மத்தியஸ்தருக்கான பரீட்சையில் பின்வரும் 16 பேர் சித்தியடைந் துள்ளனர்.

சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:

இ. இராஜகாந்தன் (பன்னாலை), இ. கண்ணா (அளவெட்டி), து. ரதீபன் (நீர்வேலி), காந்தரூபன் (நீர்வேலி), ஆ.பவாநந்தன் (பருத்தித்துறை), இ.ராஜ் மோகன் (சங்கானை), சி.ஜெகஜீவன் (சங் கானை), க. சசிகுமார் (இளவாலை) , சி. சிவச்செல்வன் (நவாலி), நா. கஜேந்திரன் (அச்சுவேலி), த. திவாகர் (ஆவரங்கால்), த. தவச்செல்வம்(உடுப்பிட்டி), த. எழில்காந் (ஆவரங்கால்), சி. சிவசொரூபன் (ஆவரங்கால்) , செ. செல்வச்சந்திரன் (கோப்பாய்), ஆ. குமாரசிவம் (ஆவ ரங்கால்)

(50)

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும், பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியை 10 விக்கெட்டுக்களால் வென்றது யாழ். மத்தி

வலி. வடக்கு, ஜூன் 30

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாண பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்டுவரும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்ட ன.

முதலில் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 43.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பானுகோபன் 21 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 32 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த டார்வின் 10 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 7 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், நிரூபன் 8 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அனுசான் 5 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 8 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ரஜீவ் லக்சன் முறையே 8, 11 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

102 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடகளமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 19.2 ஓவர்களில் விக்கெட் இழப்புக்கள் எதுவுமின்றி 102 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

யூனியன், கனிட்டன் 57 ஓட்டங்களையும் நிரோஜன் 20 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 25 ஓட்டங்களும் பெறப்பட்டன. (50-86)

15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட்; தெல்லிப்பழை மகாஜனா வெற்றி

வலி. வடக்கு, ஜூன் 30

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாண பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெற்றுவரும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 74 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்டத்தில் மகாஜனாக் கல்லூரியும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதிக் கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 35.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

சிந்துஜன் 45, திலக்சன் 31, பிரசாத் 17, ஜனார்த்தனன் 15, மோசிகீரன் 10 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 46 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த சிந்துஜன் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 36 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், மயூரதன் 4.1 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் றொபேட் நேசன் 07 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், விதுசன்34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

195 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 30.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சிந்துஜன் 23, விதுசன் 15, இரஞ்சன் 11 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 37 ஓட்டங்களும் பெறப்பட்டன. மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த கஜந்தன் 08 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும், மோசிகீரன் 8.1 ஓவர் பந்து வீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 10 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் திலக்சன், ஜனந்தன் முறையே 18, 23 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.(203-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானை இந்தியா மிரட்டாது இராணுவத் தளபதி தீபக் உறுதி

ஐதராபாத், ஜூன் 29

காஷ்மீர் எல்லையில் இந்தியா படையினரை நிறுத்தியிருப்பதைப் பார்த்து பாகிஸ்தான் பயப்பட தேவையில்லை. பாகிஸ்தானை இந்தியா ஒருபோதும் மிரட்டாது - என்று இராணுவத் தலைமை தளபதி தீபக் கபூர் கூறினார்.

ஐதராபாத் அருகே துண்டிக்கல்லில் விமானப்படை பயிற்சி மையத்தில் பயிற்சி முடித்த விமானப்படையினர் மற்றும் அதிகாரிகள் அணிவகுப்பு நேற்றுமுன்தினம் நடந்தது.

இதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

பாகிஸ்தான் தனது மேற்கு எல்லையில் தலிபான் தீவிரவாதிகளை எதிர்த்துப் போரிடுவது போல் கிழக்கு எல்லையில் இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதிகளுடனும் போரிட வேண்டும். எல்லையில் இந்தியா தேவையான அளவுக்குத் தான் படைகளை நிறுத்தியுள்ளது. இதைப் பார்த்து பாகிஸ்தான் பயப்படத் தேவையில்லை. பாகிஸ்தானுக்கு இந்தியா ஒரு போதும் ஒரு மிரட்டலாக இருக்காது.

சீனாவுடன் நியாயமான முறையில் நல்லுறவு உள்ளது. சர்ச்சைக்குரிய எல்லைப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் என்று நம்புகிறேன். சீனாவிடம் இருந்து மிரட்டல் வரும் பேச்சுக்கே இடமில்லை.

இராணுவத்தில் அதிகாரிகளுக்கு பற்றாக்குறையிருப்பது உண்மைதான்.

அதிகாரிகளுக்கான 2ஆவது பயிற்சி மையம் விரைவில் திறக்கப்படும். அதுவரை குறுகிய பணிகால அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது ஆயுத தொழில்நுட்பத்தில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனடிப்படையில் போர்க்களத்திலும் மாற்றம் ஏற்படும். இங்கு பயிற்சி முடித்த அதிகாரிகள் நவீன தொழில்நுட்பத்திலும், அண்மை கால கண்டுபிடிப்புகளிலும் கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

ஆழிப்பேரலை, புயல் பற்றி அறிவதற்கு விண்ணுக்கு விரைவில் செயற்கைக்கோள்

மாதவன் நாயர் தகவல்

ஜூலை 2ஆவது வாரத்தில் ஓஷன்சாட் செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படும் - என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய தலைவர் மாதவன்நாயர் தெரிவித்துள்ளார்.

குமரியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

சமீபத்தில் இந்தியா அனுப்பிய சந்திராயன் விண்கலம் வெற்றிகரமாகச் செயற்படுகிறது. சந்திராயன்-2, 2012இல் விண்ணில் ஏவப்படும், ஜூலை 2ஆவது வாரத்தில் ஓஷன்சாட் செயற்கைக்கோள் பி.எஸ்.எல்.வி.சி - 14 என்ற ரொக்கெட் மூலம் விண்ணில் ஏவப்படும். கடல் சம்பந்தமான ஆராய்ச்சிகளும், ஆழிப்பேரலை, புயல் போன்றவற்றைப் பற்றிய தகவல்களையும் இதன் மூலம் பெறலாம். 2015இல் பூமியைப் பற்றி ஆய்வுக்காக விண்கலத்தில் ஆள்கள் அனுப்பப்படும் - என்றார்.

இளையான்குடியில் தி.மு.க. பொது கூட்டத்தில் பெட்ரோல் குண்டு வீச்சு அமைச்சர் உயிர் தப்பினார்

சிவகங்கை, ஜூன் 30

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஒன்றிய தி.மு.க. சார்பில் வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்புக் கூட்டம் சூராணத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்தது. திமுக தலைமைக் கழகப் பேச்சாளர் வெற்றிகொண்டான் பேசிய போது, அமைச்சர் பெரியகருப்பன், மாவட்ட துணைச் செயலாளர் மணிமுத்து, முன்னாள் அமைச்சர் தென்னவன் உள்ளிட்டோர் மேடையில் ஏறிக் கொண்டிருந்தனர்.

அப்போது ஒருவர் மேடையை நோக்கி பெட்ரோல் குண்டு வீசினார். அது மேடை முன்பாக விழுந்து வெடித்து தீப்பிடித்தது. இதில் அமைச்சர் பெரிய கருப்பன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். அப்பகுதியைச் சேர்ந்த 2 பேர் தீக்காயமடைந்தனர். அவர்கள் இளையான்குடி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

முதல்வர் கருணாநிதி கதை, திரைக்கதை, வசனம் எழுதும் நீயின்றி நான் இல்லை படத்தின் தொடக்கவிழா சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்தது. நிகழ்ச்சியில் கருணாநிதி பேசுகிறார். அருகில் (இடமிருந்து) ஒளிப்பதிவாளர் கண்ணன், நடிகை மனோரமா, இசைமைப்பாளர் தேவா, இயக்குநர் இளவேனில், நடிகர் கமல்ஹாசன், தயாரிப்பாளர் ஜே.முருகன், ஏவி.எம்.சரவணன், நடிகர் விவேக் உள்ளிட்டோர்....

தமிழக மீனவர் மீது இலங்கைக் கடற்படை மீண்டும் தாக்குதல்; மீன் - வலைகள் நாசம்

இராமேஸ்வரம், ஜூன் 30

நடுக்கடலில் இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கடுமையாகத் தாக்கி, அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களைக் கொள்ளையடித்தனர். மேலும் மீன்பிடி சாதனங்களை கடலில் வீசி எறிந்து சேதப்படுத்தினர் - என்று தமிழக நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் ஏராளமான மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். கச்சதீவு அருகே அவர்களில் சிலர் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஆயுதங்கள் தாங்கிய 4 அதிநவீன படகுகளில் இலங்கைக் கடற்படையினர் ரோந்து வந்தனர். வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டப்படி வந்ததால் பயந்து போன மீனவர்கள் தங்களது படகுகளைக் கரைக்குத் திருப்பும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆனால் அதற்குள் இலங்கை கடற்படையினர் 20இற்கும் மேற்பட்ட படகுகளைச் சுற்றி வளைத்தனர். பின்னர் அந்தப் படகுகளுக்குள் இறங்கி அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களைக் கொள்ளையடித்தனர். மேலும் அவற்றில் இருந்த வலைகளை அறுத்து கடலில் வீசினர். மீன்பிடி சாதனங்களையும் கடலில் தூக்கி எறிந்தனர். சில மீனவர்கள் மீது தாக்குதலும் நடத்தினர்.

அதன்பின் இனி இந்தப் பகுதியில் மீன் பிடிக்க வரக்கூடாது என்று மீனவர்களை எச்சரித்து விரட்டியடித்தனர். இதனால் மீனவர் தொடர்ந்து மீன் பிடிக்காமல் கரைக்குத் திரும்பினர்.

நேற்றுமுன்தினம் காலை வெறுங்கையுடன் கரைக்குத் திரும்பிய மீனவர், இலங்கை படையினர் தாக்குதல் நடத்தியமை குறித்து படகு உரிமையாளர்களிடம் முறைப்பாடு தெரிவித்தனர்.

காயப்படுத்துபவர்களை விரோதிகளாக கருத மாட்டேன் என்கின்றார் கருணாநிதி

சென்னை, ஜூன் 3

என்னைத் திட்டி என் மனதைக் காயப்படுத்துவபர்களை நான் என்றும் விரோதிகளாகக் கருதமாட்டேன் - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

கருணாநிதி எழுதிய 'சுருளிமலை' என்ற நாவல், 'நீயின்றி நானில்லை' என்ற பெயரில் படமாகத் தயாராகிறது. இந்தப் படத்தின் கதை, திரைக்கதை, வசனம் ஆகியவற்றுக்குப் பொறுப்பேற்றிருப்பதும் அவரே. உதய்கிரண், மீராஜஸ்மின், கார்த்திகா, மனோரமா, விவேக் உள்ளிட்டோர் நடிக்கும் இப்படத்தை இளவேனில் இயக்குகிறார்.

இந்தப் படத்தின் தொடக்க விழா சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. விழாவில் பேசுகையிலேயே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் பேசியவை வருமாறு -

நான் எழுதிய 'சுருளிமலை' என்ற நாவலை மையமாக வைத்து இந்தப் படம் உருவாகிறது.

கமல்ஹாசன் பேசும்போது நான் எழுதிய பல வசனங்களைப் படித்துத்தான் இன்றும் பலர் நடிப்புத்துறைக்கு வந்து புகழ்பெறுகிறார்கள் எனக் கூறினார்.

என்னைக் காயப்படுத்துபவர்களை நான் என்றும் விரோதிகளாகக் கருத மாட்டேன். இன்றைக்குக் காயப்படுத்தியவர்கள் 10 நாள்கள் கழித்து மருந்து போட வருவார்கள். அப்போது அவர்களுக்கு விருந்து வைத்து வாழ்த்த வேண்டும் என்பதுதான் என் எண்ணம்.

இலங்கைத் தமிழரின் வாழ்வுரிமைக்காக தமிழகத்தில் வரும் 13இல் போராட்டம்

இந்து முன்னணி செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

புதுச்சேரி, ஜூன் 30

தமிழகம் முழுவதும் அடுத்த மாதம் (ஜூலை) 13ஆம் திகதி இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமைக்காகப் போராட்டம் நடத்துவது என்று புதுச்சேரியில் நடந்த இந்து முன்னணி செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுச்சேரி - தமிழக மாநில இந்து முன்னணி செயற்குழுக் கூட்டம், புதுச்சேரி சாரம் அன்னை வரவேற்பு இல்லத்தில் கடந்த 2 நாள்களாக நடைபெற்று வந்தது. இந்தக் கூட்டத்திற்கு புதுச்சேரி மாநில இந்து முன்னணி அமைப்பாளர் சுனில்குமார் தலைமை தாங்கினார்.

பின்பு கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகள் வருமாறு -

தமிழகம் முழுவதும் ஜூலை 13ஆம் திகதி இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமைக்காகப் போராட்டம் நடத்துவது. தமிழக அரசு கோயில்களில் திருட்டு இடம்பெறுவதைத்தடுக்க வேண்டும்.

கச்சதீவை மீட்க வேண்டும். மாவோயிஸ்ட் மீதான தடையை ஆதரிப்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

ராஜீவ் கொலை பற்றி விசாரிக்கும் கண்காணிப்பு அமைப்பு கலைப்பு

விசாரணையை சி.பி.ஐ. தொடரும்

புதுடில்லி, ஜூன் 30

ராஜீவ் காந்தி படுகொலையின் பின்னணியிலுள்ள சதித் திட்டம் குறித்து விசாரித்து வந்த பல்நோக்குக் கண்காணிப்பு அமைப்பின் பதவிக்காலத்தை மேலும் நீடிப்பதில்லை - என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

சதிப் பின்னணி பற்றி சி.பி.ஐ. இனி விசாரிக்கும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ராஜீவ் கொலையின் சதிப் பின்னணி பற்றி விசாரிப்பதற்காக பல்நோக்குக் கண்காணிப்பு அமைப்பை கடந்த 1998ஆம் ஆண்டு மத்திய அரசு அமைத்தது. இந்த அமைப்பில் சி.பி.ஐ. மற்றும் பல்வேறு உளவு அமைப்புகளைச் சேர்ந்த அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் வங்கிக் கணக்கு விவரங்கள், கொலையில் சந்திராசாமிக்கு உள்ள தொடர்பு குறித்து விசாரணை நடத்தப்பட்டது.

இதுதொடர்பான விவரங்களை பெற 23 நாடுகளுக்கு பல்நோக்கு கண்காணிப்பு அமைப்பு கடிதம் அனுப்பியது. கடந்த 10 ஆண்டுக்கும் மேலாக விசாரித்த போதும், சந்திராசாமி தொடர்புடைய 50 வங்கிக் கணக்குகள் பற்றிய விவரங்களை மட்டுமே சேகரிக்க முடிந்தது.

பல்நோக்குக் கண்காணிப்பு அமைப்பின் பதவிக் காலம் பல முறை நீட்டிக்கப்பட்டது. கடைசியாக கடந்த டிசம்பரில் வழங்கப்பட்ட நீடிப்பு மே மாதம் 31ஆம் திகதியுடன் முடிந்தது. பின்னர் அரசு எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை.

பல்நோக்குக் கண்காணிப்பு அமைப்பை கலைத்துவிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது என டில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. ராஜிவ் காந்தி கொலையில் சதிப் பின்னணி பற்றி சி.பி.ஐ. இனிமேல் விசாரிக்கும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மார்க்சிஸ்ட்டுடன் இந்தியக் கம்யூ. மோதல்; மேற்குவங்க நிலை குறித்து பரதன் விசனம்

புதுடில்லி, ஜூன் 30

மேற்கு வங்கத்தில் மாவோ நக்ஸலைட் வன்முறை ஏற்பட்டதற்கு மாநில இடதுசாரி முன்னணி அரசே காரணம். மார்க்சிஸ்ட் தலைவர்கள் அதிகார போதையில் ஆணவத்துடன் நடந்து கொள்கின்றனர் - என்று இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் ஏ.பி. பரதன் குற்றம்சாட்டியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

லால்கரில் மாவோ இயக்கத்தினர் வன்முறையில் ஈடுபட்டதற்கு மக்களை மாநில அரசு புறக்கணித்ததே காரணம். மக்களுக்காக, குறிப்பாக பழங்குடியினர் நலனுக்காக இடதுசாரி முன்னணி அரசு செய்ய வேண்டியதை செய்யவில்லை. நிர்வாக விடயங்களில் கூட்டணிக் கட்சிகளையும் கலந்து பேசுவதில்லை. ஒரு கட்சி ஆட்சி நடப்பது போல்தான் அரசு செயற்படுகிறது.

பெரியண்ணன் பாணியில் தன்னால் எல்லாம் முடியும் என்ற நினைப்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நடந்து கொள்கிறது. மார்க்சிஸ்ட் தலைவர்கள் அதிகார போதையில் ஆணவமாக பேசுகின்றனர். வேளாண்துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கை முழு அளவில் நடைபெறவில்லை. இந்தச் சீர்திருத்தத்தால் பயனடைபவர்களில் 75 சதவீதம் பேர் பழங்குடியினர்தான். பழங்குடியின மக்களின் முன்னேற்றத்தில் அரசு அதிக அக்கறை காட்டியிருக்க வேண்டும்.

இடதுசாரி முன்னணி அரசின் பலவீனத்தை மம்தா பானர்ஜி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். அதனால்தான் திரிணாமுல் காங்கிரஸுக்கு தேர்தலில் வெற்றி கிடைத்தது. மார்க்சிஸ்ட் கட்சி, கூட்டணிக் கட்சிகளுடன் கலந்து பேசி ஒவ்வொரு நடவடிக்கையையும் எடுத்திருந்தால் இந்தளவுக்கு தோல்வி ஏற்பட்டு இருக்காது.

கூட்டணிக் கட்சிகளும் மக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளத் தவறி விட்டன. லால்கர் சம்பவத்தில் [illegible] மேற்கு வங்க அரசு திருத்தக் கொள்ள வேண்டும் - என்றார்.

எல்லையில் அணை கட்டுவதை நிறுத்துமாறு இந்தியாவுக்கு வங்கதேசம் கோரிக்கை

டாக்கா, ஜூன் 30

இந்தியா - வங்கதேச எல்லைப் பகுதியில் திபாய்முக் அணை கட்டும் பணியை நிறுத்த வேண்டும் - என்று வங்கதேசம் கோரிக்கை விடுத்துள்ளது.

அணை கட்டப்படவுள்ள இடத்தை தங்கள் நாட்டு நாடாளுமன்றக் குழு பார்வையிடும் வரை பணிகளைத் தொடங்கக் கூடாது என்றும் வங்கதேசம் கூறியுள்ளது.

இதுகுறித்து அந்நாட்டு வெளியுறவுத் துறை [illegible] சனிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் -

அண்மையில் நியூயோர்க் சென்றிருந்த வங்கதேச வெளியுறவு அமைச்சர் நிருபமோனி, இந்திய வெளியுறவுத் துறை இணையமைச்சர் பிரணீத் கௌர சந்தித்துப் பேசினார். இந்திய - வங்கதேச எல்லையில் இந்தியா கட்டவுள்ள அணை குறித்து வங்கதேச நாடாளுமன்றக் குழுவினர் அங்கு சென்று பார்வையிடவுள்ளனர். இந்த அணையால் வங்கதேசத்துக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா என்பது குறித்தும், சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்தும் அவர்கள் ஆய்வு நடத்துவார்கள். எனவே இக்குழு வரும் வரை அணை கட்டும் பணிகளைத் தொடங்கக் கூடாது என்று பிரணீத்கௌரிடம், நிருபமோனி கேட்டுக் கொண்டார் - என்று அதில் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் ஆட்சியை நீடிக்கும் முயற்சியா?

* சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தித் தற்போதைய நாடாளுமன்றின் பதவிக் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடித்தல்.

* அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இரண்டு ஆண்டுகள் முற்கூட்டியே நடத்தி, அதில் வென்ற பின்னர், அந்த வெற்றிக்கான பதவிக் காலத்தை, தற்போதைய பதவிக் காலத்தின் முடிவிலிருந்து ஆரம்பித்தல். அதன் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த எட்டு ஆண்டுகளுக்கு எந்தவிதச் சவாலுமின்றி பதவியில் தொடர்வதை இப்போதே - முற்கூட்டியே - உறுதி செய்தல்.

* தற்போதைய ஜனாதிபதியை அவரது வாழ்நாள் முழுவதுக்குமான ஜனாதிபதியாக உறுதிப்படுத்துதல்.

- இப்படி அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து கொழும்பு அரசியல் வானில் பல்வேறு ஊகங்களும், பேச்சுகளும் தாராளமாக அடிபடுகின்றன.

இத்தகைய திட்டம் எதையும் செயற்படுத்தும் எண்ணமோ, யோசனையோ அரசுத் தலைமைக்கு இருக்கின்றதா, இல்லையா என்பது உறுதியில்லை.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை முற்றாக அழித்து, யுத்தத்தில் வென்றாகிவிட்டது என அரசு அறிவித்துள்ள சூழலில் அது, அடுத்து எடுக்கப்போகும் அரசியல் நகர்வு என்ன என்பது தொடர்பாகத் தென்னிலங்கையில் ஊகங்கள் பலவிதமாக உலாவரத் தொடங்கிவிட்டன. அவற்றில் சிலவே மேலே குறிப்பிட்டவையாகும். அந்தச் செய்திகளில் உண்மையும் இருக்கலாம். இல்லாமலும் போகலாம்.

எது, எப்படியென்றாலும் இத்தகைய அரசியல் நகர்வுகளை அரசு முன்னெடுப்பது சரியா, நியாயமானதா என்ற கேள்வியும் அதற்கான விடையுமே முக்கியமானவையாகும்.

சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதன் மூலம் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிக்கவும், ஜனாதிபதித் தேர்தலை இரண்டு ஆண்டுகள் முன்னதாக நடத்தவும் அரசமைப்பில் இடமுண்டு.

ஆனால் ஒருவரை வாழ்நாள் கால ஜனாதிபதியாகப் பதவியில் அமர்த்துவதற்கான சட்ட, அரசமைப்பு ஏற்பாடுகள் நமது அரசமைப்பில் இல்லை. அப்படிச் செய்வதானாலும் அதற்கு வழி செய்யும் அரசமைப்புத் திருத்த ஏற்பாடுகளை இனித்தான் நிறைவேற்ற வேண்டும்.

முதல் இரண்டு விடயங்களையும் செய்வதற்கு அரசமைப்பில் ஏற்பாடு செய்தவர் தற்போதைய அரசமைப்பை உருவாக்கும் சூத்திரதாரியாக விளங்கிய அப்போதைய அரசுத் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆவார்.

1977ஜூலையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் - தொகுதி வாரியான தேர்தல் முறையில் - ஐந்தில் நான்கு பங்கு நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றி, அதை வைத்துக்கொண்டு இந்த அரசியல் சித்து விளையாட்டுக்களை அவர் காட்டினார்.

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் ஒரு நாடாளுமன்றின் பதவிக் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்கும் அரசமைப்பு ஏற்பாடு, தற்போதைய அரசமைப்பின் மூல வடிவத்திலேயே இருக்கின்றது. ஆனால் அதைச் செய்வதற்கு அதற்கான பிரேரணை முதலில் நாடாளுமன்றில் மூன்றில் இரு பங்குக்குக் குறையாத எம்.பிக்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது கட்டாயம்.

1983 இல் அத்தகைய தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றச் செய்த பின்னரே சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி அந்த நாடாளுமன்றின் - தமது அரசின் - பதவிக்காலத்தை 1989 வரை நீடித் தார் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா. அதற்கான நாடாளுமன்றப் பலமும் அவரிடம் அப்போது இருந்தது. ஆனால் அதே வேலையை இப்போதைய அரசு செய்வதற்கு, அதனால் அத்தகைய நாடாளுமன்ற ஆதரவைத் திரட்ட முடியுமா என்பது கேள்விக்குறியே.

அப்போது ஜே.வி.பி. தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்து, அதனால் பொதுத் தேர்தலை அவர்கள் குழப்பலாம் என்ற எச்சரிக்கையை முன்னிறுத்தியே பொதுத் தேர்தலுக்குப் பதிலாக சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி நாடாளுமன்றின் பதவிக் காலத்தை நீடித்தார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.

ஆனால், இப்போது பயங்கரவாதத்தை அடியோடு அழித்து அமைதியை ஏற்படுத்தி விட்டதாகக் கூறும் இந்த அரசு, பொதுத் தேர்தலுக்குப் பதிலாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி நாடாளுமன்றின் பதவிக் காலத்தை நீடிப்பதாயின் அதற்கு என்ன காரணத்தை முன்வைக்கப் போகின்றது?

அப்போது இவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்றின் பதவிக் காலத்தை நீடித்தல் மற்றும் முற்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை வசதியான காலத்தில் நடத்தி முடித்தல் ஆகிய நடவடிக்கைகளை அப்போதைய எதிர்க்கட்சியாக இருந்த - தற்போதைய பிரதான ஆளுங்கட்சியான - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முற்றாக எதிர்த்தது. அப்படி எதிர்த்தவர்களில் பிரதானமானவர் அப்போதைய எதிரணி எம்.பி யும் தற்போதைய ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தான்.

அதேசமயம், 1970 இலிருந்து 1975 வரையிலான காலப்பகுதிக்குத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தை, 1972 ஆம் ஆண்டின் புதிய அரசமைப்பு மூலம் 1977 வரை மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடித்ததன் காரணமாகவே 1977 பொதுத் தேர்தலில் - மீண்டும் அடுத்த பதினேழு ஆண்டுகளுக்கு மீள எழுந்திருக்கவே முடியாத அரசியல் சறுக்கலை - வலுவான அடியை - ஸ்ரீல.சு.க. எதிர்கொள்ள நேர்ந்தது.

இந்த முன் அனுபவங்களைக் கொண்டிருப்பதாலும் - வன்னி யுத்தகள வெற்றியின் மூலம் தென்னிலங்கை மக்கள் மத்தியில் அதீத செல்வாக்கைத் தான் பெற்றிருப்பதாக இந்த அரசுத் தலைமை கருதுவதாலும் -

ஆட்சி நீடிப்பை உறுதி செய்வதற்காக இத்தகைய குறுக்கு வழியை - சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி நாடாளுமன்றின் பதவிக் காலத்தை நீடிக்கும் எத்தனத்தை - அது நாடாது என்று நம்பலாம்.

இலங்கையில் பிரிவினைவாதத்துக்கு சர்வதேச நாடுகள் அரசியல் தீர்வு மூலம் உரம்போட முயல்கின்றன

ஆயுதப்போராட்டம் மட்டுமே தோற்கடிக்கப்பட்டுள்ளது—ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 30

ஆயுத ரீதியாக நாட்டைப் பிரிக்கும் பிரிவினைவாதம் முடிவுக்கு வந்துள்ள போதிலும், அரசியல் ரீதியாக நாட்டைப் பிரிக்கும் போராட்டம் தொடர்ந்த வண்ணமே உள்ளது என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பிற்றக்கோட்டவில் அக்கட்சி நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவே இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டைப் பிரிப்பதற்காக ஆயுதம் ஏந்திப் போராடிய புலிகளைக் கொன்றொழித்து அரசு நாட்டைப் பிரிவினைவாதத்தில் இருந்து காப்பாற்றிவிட்டது என்று இந்த நாட்டு மக்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால், உண்மையில் பிரிவினைவாதம் தோற்கடிக்கப்படவில்லை. பிரிவினைவாதத்திற்காகப் போராடிய ஆயுதப் போராட்டம்தான் தோற்கடிக்கப்பட்டுள்ளது. ஆனால், அரசியல் ரீதியாக நாட்டைப் பிரிக்கும் பிரிவினைவாதம் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

சர்வதேச நாடுகள் இந்தப் பிரிவினைவாதத்துக்கு உரம் போடுகின்றன. தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைக்குமாறு அந்நாடுகள் கூறுகின்றன. அந்நாடுகள் கூறும் அரசியல் தீர்வின் ஊடாகவே அரசியல் ரீதியாக இந்த நாட்டைப் பிரிக்கும் சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பிரிவினைவாதத்துக்கு அரசு உடன்பட்டுள்ளது. 13 ஆம் திருத்தச் சட்டத்தை அரசியல் தீர்வு யோசனையாக முன்வைக்க அரசு திட்டமிட்டுள்ளது என்று அரசு தெரிவிக்கின்றது.

இது தொடர்பில் அரசுக்குள் பல்வேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இது தொடர்பான அரசின் சரியான நிலைப்பாட்டைத் தெரிவிக்குமாறு கோரி நாம் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பினோம்.

அந்தக் கடிதத்துக்கு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன ஜனாதிபதியிடமிருந்து பதிலைப் பெற்றுத் தெரிவித்துள்ளார். 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசு உறுதியாக இருக்கிறது என்று அவர் கூறியுள்ளார்.

புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் இந்த நாட்டுக்குப் பாதகமாகவே அமையும் என்று அப்போதே நாம் சொன்னோம். அது பிறகு உண்மையானது. அதே போல் 13 ஆம் திருத்தச்சட்டம் இந்த நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என்று நாம் அடித்துக் கூறுகிறோம். இதன் உண்மைத் தன்மை தாமதித்தாவது விளங்கும் - என்றார்.

கலாநிதி சிவமதி மீண்டும் பீடாதிபதியாக தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதியாக கலாநிதி திருமதி சிவமதி சிவச்சந்திரன் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நேற்று நடந்த கூட்டத்திலேயே பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். பீடாதிபதி பதவி மூன்று வருடங்களைக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (1-7)

இலங்கை விவகாரம் தொடர்பாகக் கடும் தொனியில் 22 அறிக்கைகளை நாம் வெளியிட்டுள்ளோம்

ஐ.நா. செயலர் பான் கீ மூன் கூறுகின்றார்

நியூயோக், ஜூன் 30

இலங்கை மோதல் தொடர்பாக 22 அறிக்கைகளைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு கடுமையானதாக விடுத்துள்ளேன். ஐ.நா. செயலாளர் நாயகம் என்ற நிலையில் இதனையே செய்யமுடியும் என பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கிலுள்ள தனது அலுவலகத்தில் வைத்து கடந்த வாரம் 'யொன்சாப்' செய்திச் சேவைக்கு பேட்டியளித்திருக்கும் பான் கீ மூன் அரசாங்கமொன்றை விட ஐ.நா. வின் செயற்பாடுகள் மிகவும் வித்தியாசமானவை என்று கூறியுள்ளார்.

பல சர்வதேச நெருக்கடிகள் தொடர்பாக ஐ.நா. தொடர்பான எதிர்பார்ப்புகள் அதிக உச்சமட்டத்தில் இருப்பதாகவும் பிரச்சினைகளுக்கு இலகுவாகத் தீர்வு காணப்படாத போது விரக்திநிலை அதிகளவில் ஏற்படுவதாகவும் முன்னாள் தென்கொரிய வெளிவிவகார அமைச்சரான பான் கீ மூன் கூறியுள்ளார்.

எரிபொருள், உணவு, நிதி, புரூ பிராந்திய நெருக்கடிகள், உலகம் வெப்பமடைதல், வறுமை, ஈரானிய, வடகொரிய அணுப் பிரச்சினைகள் என்பவை தொடர்பாக ஐ.நா. நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக பான் கீ மூன் கூறியுள்ளார்.

சர்வதேச பிரச்சினைகளுக்கு ஒரு தனிநபரால் தீர்வுகாண முடியாது என்று கூறியுள்ள அவர் ஐ.நா. அங்கத்துவ நாடுகளின் ஒத்துழைப்பு தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

தன்னைப் பற்றிய எதிர்மறையான விமர்சனங்களை ஏற்றுக்கொண்ட அதேசமயம் தனது தலைமைத்துவப் பாணியை அவர் நியாயப்படுத்தியுள்ளார்.

பிராந்திய மோதல்களில் சம்பந்தப்பட்ட நாடுகள் வேறுபட்ட பின்னணிகளையும் புரிந்துணர்வுகளையும் கொண்டுள்ளன. அவற்றில் பல விவகாரங்களில் ஐ.நா. தலையிட முடியாது.

சர்வதேச விழுமியங்கள் சம்பந்தப்பட்டவையாயினும் மனித உரிமைகள் மற்றும் இறைமையுடன் தொடர்புபட்டவிடயங்களாயினும் நான் வலுவான அறிக்கைகளை விடுத்து வருகிறேன்.

இலங்கை மோதல் தொடர்பாக 22 அறிக்கைகளைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு கடுமையானதாக விடுத்துள்ளேன்.

மியான்மார் சூறாவளியால் பாதிக்கப்பட்டபோது அங்கு சென்றேன். பன் சர்வதேச உணவு உதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ஜுபன்டா இராணுவ நிர்வாகத்தை இணங்கச் செய்வதால் 5 இலட்சம் உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது என்று பான் கீ மூன் கூறியுள்ளார்.

இந்த விடயங்களே ஐ.நா. செயலாளர் நாயகத்தால் மேற்கொள்ளக் கூடியவை என்றும் பான் கீ மூன் கூறியுள்ளார்.

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த 129 சிறுமிகள் கோயில்குளம் சிறுவர் இல்லத்தில்

வவுனியா, ஜூன் 30

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த 129 சிறுமிகள் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் சிறுவர் நன்னடத்தைப் பிரிவினரின் பொறுப்பில் வவுனியா கோயில்குளம் சிவன்கோயில் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சிவன்கோயில் அருளகம் சிறுவர் இல்லத்தில் ஏற்கனவே சுமார் 100 வரையிலான சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். இவர்களுக்கு மேலதிகமாக 129 சிறுமிகள் சிவன் கோவில் அறங்காவலர் சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர், சிறுமியர்க்கென தனித் தனியான இல்லங்கள் ஏற்கனவே இங்கு அமைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, இராணுவத்தினர், பொலிசார், அரச அதிபர், பிரதேச செயலர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் வைரவபுளியங்குளம், வைரவர் கோயிலருகில் அமைக்கப்பட்டுள்ள புதிய சிறுவர் இல்லத்தில் 65 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டு பராமரிக்கப் பட்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சிறுவர் இல்லத்தின் செயற்பாடுகள், இங்குள்ள சிறுவர்களின் நலன்கள் என்பவற்றை வவுனியா மாவட்ட நீதிமன்றம் நேரடியாகக் கண்காணித்து வருகின்றது. மாவட்ட சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரிகளும் இந்த இல்லத்தை மேற்பார்வை செய்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறிலிய செவன என பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த சிறுவர் இல்லத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் ஜனாதிபதியின் பாரியார் திருமதி சிராந்தி ராஜபக்ச வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.

அமெரிக்காவின் பயண எச்சரிக்கையால் இலங்கை அரசாங்கம் கடும் அதிருப்தி

கொழும்பு, ஜூன் 30

இலங்கைக்கான விஜயங்கள் ஆபத்தாக அமையக் கூடும் என்ற அமெரிக்காவின் பயண எச்சரிக்கை கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் அமெரிக்க பிரஜைகள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும், தீவிரவாத தாக்குதல்கள் இடம்பெறக் கூடும் எனவும் அமெரிக்கா தனது புதிய பயண எச்சரிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாக தோற்கடிக்கப்பட்டுள்ளனர் என்ற யதார்த்தத்தை புறந்தள்ளி அமெரிக்கா நடவடிக்கை மேற்கொள்வதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு சூழ்நிலை குறித்து அமெரிக்கா சரியாக புரிந்துகொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், இலங்கைக்கான பயணங்களை மேற்கொள்வதில் எவ்வித ஆபத்தும் இல்லை என பாலித கொஹன சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் கிழக்கு பகுதிகளில் இயங்கி வரும் துணை இராணுவக் குழுக்களினால் அமெரிக்கப் பிரஜைகளுக்கு ஆபத்து ஏற்படக் கூடும் என பயண எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை

ஆனி 17 01.07.2009
புதன்கிழமை
திதி: நவமி
மு.ப. 09.25 வரை
நட்சத்திரம்: சித்திரை
பி.ப. 03.38 வரை
யோகம்: மரணம் 01.26 - 03.58
ராகுகாலம்: 11.56 - 01.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகளில் பணிசெய்வோரின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்க தேர்தல் ஆணையாளரிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடைபெறும் நேரத்தில், பத்திரிகைகள் மீது விடுக்கப்படும் அச்சுறுத்தல்களை நோக்கும் போது, அவற்றை அமைதியடையச் செய்து விட்டு தாங்கள் விரும்பியதைச் செய்ய சிலர் முனைந்துள்ளனர்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பு மேற்கண்டவாறு தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளது. கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்டு தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நாளன்று குடாநாட்டில் வெளிவரும் மூன்று நாளேடுகள் எரிக்கப்பட்டன. அந்தச் சம்பவத்தை அடுத்து மூன்று நாள்களில் உதயன் பத்திரிகைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. உதயனில் பணிபுரியும் ஊழியர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும், விற்பனை முகவர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய வன்செயல் செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இந்த நிலையை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

இத்தகைய சம்பவங்கள் ஜனநாயகத்தை நிந்திக்கும் செயல் ஆகும். பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரங்களின் உயர் பெறுமதியை அவமதிப்பதுமாகும்.

ஆகையால் குடாநாட்டில் பத்திரிகைகளில் பணி செய்வோரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதோடு அவை இடையூறு எதுவுமின்றி வழமைபோல செயற்பட போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்று கூறப்பட்டுள்ளது. (அ-1)

ஐ.தே.கட்சியின் ஜயலத் ஜயவர்த்தனா கண்டிக்கிறார்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'உதயன்' பத்திரிகையின் பணியாளர்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் கொலை அச்சுறுத்தலை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன வன்மையாகக் கண்டித்திருக் கின்றார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவைவருமாறு:- பணியாளர்கள், செய்தியாளர்கள் மற்றும் முகவர்கள் அனைவருக்கும் 26.06.2009 ஆம் திகதி விடுக்கப்பட்டுள்ள கொலை மிரட்டலை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்

எமது நாட்டின் ஊடகச் சுதந்திரம் வடக்கிலும் தெற்கிலும் பாதுகாக்கப் படல் அவசியமானதாகும். வடக்கு மக்களுக்கு உடனுக்குடன் செய்திகளை வழங்குவதில் 'உதயன்' பத்திரிகை என்றுமே பின்நின்றதில்லை. யுத்தம் உக்கிரமடைந்திருந்த காலங்களில்கூட உரிய செய்திகளை வெளியிடுவதில் 'உதயன்' ஆசிரியர் குழாம் தவறவில்லை. இதனாலேயே 'உதயன்' நாளிதழுக்குப் பல்வேறுபட்ட அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. எமது நாட்டின் ஊடகவியலாளர்களுக்குச் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் இன்றியமையாததாகும்.

'உதயன்' பத்திரிகைக்கு விடுக்கப் பட்டுள்ள இந்த மிரட்டல் செய்தித் தொடர்பாக உரிய விசாரணையை உடனடியாக மேற்கொள்ளுமாறு அரசின் அதிகாரம் பெற்றவர்களிடம் கேட் டுக்கொள்கிறேன்.

ஆசிய அபிவிருத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர் என்றும், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் நிவாட் கப்ரால், நிதியமைச்சின் செயலாளர் சுமித் அபேசிங்க ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர் என்றும் கூறப்பட்டது.

வவுனியா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமில் இருந்த இவர்கள் எப்படி அங்கிருந்து வெளியேறினர் என்பது குறித்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனக் கொழும்பு பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இவர்கள் மூவரும் விடுதலைப்புலிகளின் முன்னணி செயற்பாட்டாளர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனகரட்ணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம நீதிவான் நிஸந்த ஹப்பு ஆராய்ச்சி சென்று பார்வையிட்டார்.

கனகரட்ணம் எம்.பியைத் தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணை செய்யக் கோரும் குற்றத்தடுப்புப் பிரிவின் விண்ணப்பத்துக்கு நீதிவான் அனுமதியளித்தார்.

பத்திரிகைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ். நகரில் வெளியாகும் தினசரி பத்திரிகைகளை தீயிட்டு கொளுத்திய அதே கும்பல் 'உதயன்' பத்திரிகைக்கும், அங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கும் பெரும் மரண அச்சுறுத்தலை விடுத்துள்ளது.

இதை தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டிக்கின்றது. எழுதுவதற்கும் ஊடகங்களுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். அப்போதுதான் ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பமுடியும்.

இவ்வாறான வன்முறைச் செயற்பாடுகள் அனைத்திற்கும் முற்றுப் புள்ளி வைக்கவேண்டுமாயின், அரசின் அனுமதியைப் பெற்று ஆயுதம் வைத்திருப்பவர்களைத் தவிர்ந்த ஏனைய அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அனைவரும் சுதந்திரமாக பேசவும் செயற்ப டவும் அனுமதிக்க வேண்டும் - என்றுள்ளது. (அ-சி)

பத்திரிகைப் பணிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்படும் மூன்று நாளேடுகளும் தீயிடப்பட்ட பின்னர் பத்திரிகை வெளியிடுதல், விநியோகித்தல் பணிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் அவை தொடர்பான அச்சுறுத்தல்களால் குழப்பம் அடைய வேண்டாம் என்று பொதுமக்களைக் கேட்டுக்கொள்வதாகப் படைத்தளபதி தெரிவித்தார். (அ)

13 ஆவது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், சமூக கௌரவத்தைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை.

இலங்கை போன்ற சிறிய நாடு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் தேவையற்ற பொருளாதாரச் செலவுக ளையே எதிர்கொள்ள வேண்டிவரும் - என்றார்.

உதயனுக்கு விடுக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு'' என்ற மர்ம அமைப்பை அல்லது அதன் கீழ் உள்ளவர்களை பொலிஸ் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இது வரை கண்டுபிடிக்கவில்லை. இது அரச தரப்பின் மீதும், அவர்களது நடவடிக்கைகள் மீதும் நம்பிக்கையீனங்களைத் தோற்றுவிக்கின்றது.

மாநகர சபைத் தேர்தல் நடக்கவிருக்கும் இச்சமயத்தில் இவ்வாறான வன்முறைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

அரச பாதுகாப்பு நிறுவனங்கள் தொடர்ந்தும் ''இனந் தெரியாதவர்கள்'' இச் செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பதாக சொல்லித் தப்பிக் கொல்வதில் எந்த அர்த்தமும் இல்லை.

''நாட்டைக்காக்கும் தமிழர் கூட்டமைப்பின்'' தொடர்ச்சியான மிரட்டலானது ஜனநாயகம், அமைதி, சமாதானம், அபிவிருத்தி ஆகிய அனைத்துக்குமே தடையாக இருக்கும். இதனைக் கவனத்தில் எடுத்து இந்த மிரட்டல்களுக்கு முடிவுகட்டும் படி பாதுகாப்புத் தரப்பினரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக்கொள்கின்றது - என்றுள்ளது. (அ)

SHAMROCK
ஷாம்ரொக் ,யாழ்.
A/L 2011
புவியியல் - A.J.பிரான்
அரசியல் - T.சுதன்
இந்து - S.கார்த்திக்
தமிழ் - J.இராஜன்
கணிதம் - U.L.மோர்
2010 - paper Class
★ O/L Day Class
(புதிய மாணவர் மாத்திரம்)
★ Eng.med. 6 to 11

SUBRA (14)
சித்தன் கேணி
வட்டுக்கோட்டை
O/L Day (பழைய மாணவர்கள்)
புதிய பிரிவு இரு இடங்களிலும்
01.07.2009 காலை 7 மணிமுதல்

யகூஷி அகாஷி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கொழும்பை வந்தடைந்த அகாஷியை இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் குனியோ டகாஷி வரவேற்றார்.

யுத்த நிறுத்தத்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டது நல்ல விடயம். இதை நாம் அனைவரும் வரவேற்கிறோம்.

ஐக்கிய தேசியக் கட்சி அப்போது வகுத்த வியூகமே பயங்கரவாதம் தோல்வியடையக் காரணம். புலிகளுடன் எமது கட்சி அப்போது செய்துகொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தமே புலிகளின் தலைவரின் கொலைக்குக் காரணமாக அமைந்தது.

இனங்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தி பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்ட எமது கட்சி முயற்சி எடுத்தது. ஆனால், இந்த அரசு இனங்களிடையே குரோதத் தன்மையை வளர்த்துவிட்டு அதனூடாகவே பயங்கரவாதத்தை ஒழிக்க நடவடிக்கை எடுத்தது.

எமது தந்திரோபாயத்தைப் புலிகள் அப்போது புரிந்து கொண்டனர். ரணில் தந்திரோபாயமாக அரசியல் செய்கின்றார் என்று புலிகள் அப்போது கூறியிருந்தனர்.

எப்படி இருப்பினும், புலிகள் கொல்லப்பட்டு பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டமை இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்லது. ஆனால் இனங்களிடையே காணப்படும் குரோத மனப்பான்மையை இல்லாது செய்து இனங்களை ஐக்கியப்படுத்த வேண்டியது இந்த அரசின் கடமை - என்றார்.

வன்னியில் மீளக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுகுறித்து பி.பி.ஸி. வெளியிட்ட செய்தி வருமாறு:-

மற்றுமொரு தீவிரவாத எழுச்சியை ஒடுக்குவதற்கும் அபிவிருத்தித் திட்டங்களில் உதவுவதற்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கையை 50 வீதத்தினால் அதிகரிக்க அரசு எண்ணியுள்ளது எனப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்தவர்கள் இவ்வருட இறுதிக்குள் மீளக் குடியேற்றப்படுவார்கள் எனத் தெரிவிக்கும் அரசு, அதற்குப் பிறகும் குறிப்பிட்ட காலம் வரை இராணுவம் அவர்களுடன் தங்கியிருக்கும் எனவும் கூறுகின்றது.

வடக்கில் இரண்டு இராணுவத் தளங்கள் அமைக்கத் தாங்கள் எண்ணியுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

மக்கள் மீளக்குடியேறலாம்

படையினரின் கண்காணிப்பும் இருக்கும்

''தற்போது முல்லைத்தீவிலும் கிளிநொச்சியிலும் இரு இராணுவத் தலைமையகங்கள் உருவாக்கப்படுகின்றன. இந்தத் தலைமையகங்களின் கீழ் முகாம்கள் அமைக்கப்படும். இதன் அர்த்தம் மக்கள் அங்கு மீளக் குடியேற முடியாது என்பது அல்ல. மக்கள் மீளக் குடியேறலாம். எனினும், அந்தப் பகுதியில் நடைபெறும் நடவடிக்கைகளை நாங்கள் கண்காணிக்க வேண்டும். எதிர்காலத்தில் அந்தப் பகுதிகளில் பயங்கரவாத நடவடிக்கைகள் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்வதே இதன் நோக்கம்'' என்றார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்கூறுகையில், அரசு மேற்கொள்ளும் அனைத்து செயற்பாடுகளிலும் இராணுவத்தின் நடவடிக்கைகள் அதிகரிக்கின்றன. இது கவலைதரும் விடயம் எனத் தெரிவித்தார்.

இதன் காரணமாக தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அரசியல் நடவடிக்கைள் குறித்து கவனம் செலுத்தப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவிக்கிறார்.

இராணுவத்தை மேலும் மேலும் விஸ்தரிக்க முயல்கிறோம் என்றால் அதன் அர்த்தம் என்ன? என அவர் கேள்வி எழுப்பினார். இது தமிழர்களுக்கு மாத்திரமல்ல, சமாதானத்தை நேசிக்கும், ஜனநாயக ரீதியில் சிந்திக்கும் சிங்களவர்களுக்கும் மோசமான விடயமாக அமையும் என்றார் அவர். (அ-சி)

விற்பனையாகிறது

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அதி நவீன வடிவமைப்புக்களில் (Latest Design) உருவான திருமண, பூப்புனித நீராட்டுவிழாக்களுக்கு பயன்படுத்தக் கூடிய அழைப்பு மடல்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அன்னை புத்தகசாலை

இல-7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 222 9881

'வணங்காமண்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு கேட்டதற்கிணங்க, இந்த விடயம் தொடர்பாக தான் இலங்கை செஞ்சிலுவைக் குழுவுடன் தொடர்பு கொண்டார் எனவும், அந்தப் பொருள்களை ஏற்க இலங்கை செஞ்சிலுவைக் குழு ஒப்புக் கொண்டதை அடுத்து அந்த பொருள்களைப் பெற்று இலங்கைக்கு வேறு கப்பலில் அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் இந்திய செஞ்சிலுவைக் குழுவின் தலைமைச் செயலர் எஸ்.பி.அகர்வால் பி.பி.ஸிக்குக் கூறியுள்ளார்.

அதற்கான நடவடிக்கைகளை சென்னையில் உள்ள தமது அலுவலகம் மேற்கொண்டுள்ளது எனவும், விரைவாக அந்தப் பொருள்கள் இலங்கைக்கு அனுப்பப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

உதயன் ஊழியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதயன் பணியாளர்களை அச்சுறுத்தும் வகையில் ''நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு'' என்ற பெயரில் யாழ்.நகரில் உள்ள சில பத்திரிகை முகவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அச்சுறுத்தல் துண்டுப் பிரசுரம் குறித்து நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கேட்டுள்ளார்.

வன்மையான கண்டனம்

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஊடகங்களுக்கான சுதந்திரத்தை மதித்து வரும் நாம், ஊடகங்கள் மீது விடுக்கப்படும் மிரட்டல்களையும், தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ள இன்றைய சூழலில் குடாநாட்டில் மீண்டும் இவ்வாறான மிரட்டல் கும்பல்கள் தலை தூக்க முனைவது ஆரோக்கியமான விடயமல்ல எனவும் இந்த நிலையில் உரிய சட்ட நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு இவ்வாறான கும்பல்களை இனங்கண்டு அவற்றை இச் சமூகத்தில் இருந்து துடைத்தெறிய உரிய முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

எமது மக்களுக்கான உயிர் வாழும் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களது கருத்துச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் மற்றும் தொழில் செய்யும் சுதந்திரம் என்பவற்றை படிப்படியாக உறுதி செய்ததற்காக நான் அயராது உழைத்து வருகின்ற நிலையில், இவ்வாறு ஊடகங்களின் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் முகமாக ஒருசில சமூக நலன் சாராத விஷமிகள் செயற்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும். இதற்குரிய அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் மும்முரமாக எடுத்து வருகிறோம்.

வெகுவிரைவில் இனங்காணப்படுவர்

கருத்துகளுக்கு கருத்துகளால் முகங்கொடுக்க இயலாத கோழைத்தனமான செயற்பாடுகளால் தான் எமது சமூகம் இன்று இவ்வாறான பாரிய அழிவுக்கு உட்பட்டுள்ளது. தொடந்தும் நாம் இவ்வாறான காட்டுமிராண்டிக் கும்பல்களுக்கு இடமளித்துக் கொண்டிருக்க இயலாது. இவ்வாறான மிரட்டல் பேர்வழிகள் வெகு விரைவில் எமது சமூகத்தின் முன் இனங்காட்டப்படுவார்கள் என்றும் நம்பிக்கையுண்டு.

இந்த வகையில் மேற்கொண்டுவரும் சட்ட நடவடிக்கைகளின்பால் நம்பிக்கை கொண்டு உதயன் ஆசிரியபீடத்தார், பணியாளர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனை முகவர்கள் அனைவரும் அச்சம் கொள்ளாது தங்களது செயற்பாடுகளைத் தொடரும்படி கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (அ)

கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலில் இன்று ஆரம்பமாகவுள்ள இலங்கைப் பொருளாதார உச்சிமாநாட்டில் அகாஷி பிரதான உரையை நிகழ்த்தவுள்ளார்.

மேற்கோப் மைவிகளின் வேலைகளுக்கிணங்க
தலையகம் 52, ஸ்ரான்லி வீதியில்
தரம் 6,7,8,9,10,O/L (EVENING BATCH)
புதிய பிரிவு ஆரம்பம்: 01.07.09 மாலை 4 மணி
இன்று தொடக்கம் அனுமதிகள் வழங்கப்படுகின்றன. அனுமதிபெற்ற மாணவர்கள் புதன் (1 மணி) சமுகம் தரவும்.
யாழில் 35 வருடமாக தரம் 6-O/L வரை தனித்துவமும் கட்டுப்பாட்டுடனும் தலைசிறந்த ஆசிரியர் குழாமினால் கல்விச் சேவையை முன்னெடுத்துச் செல்லும் ஒரே நிறுவனம்.
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ். T.P.No.0772288251

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.